Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 15 சனிக்கிழமை (29.06.2013) பக்கங்கள் 20 ஓசை – 272



















# அமைச்சர் டக்ளஸிடம் மன்னிப்புக் கேளுங்கள்

## 'உதயன்' பத்திரிகை உரிமையாளருக்கு யாழ்.மாவட்ட நீதிமன்றம் ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

அவதூறு கிளப்பும் செய்தியை வெளியிட்டமைக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பகிரங்க மன்னிப்புக் கோருமாறு உதயன் பத்திரிகை உரிமையாளருக்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் ஆலோசனை வழங்கியுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 'உதயன்' பத்திரிகைக்கு எதிராக தன்னை அவமானப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அச்செய்திகளின் பிரசுரம் காரணமாக தனக்கு ஏற்பட்ட அவமானத்திற்காக மானநஷ்டஈடு கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று யாழ். மாவட்ட நீதி

19 ஆம் பக்கம் பார்க்க

## தன்சானியாவுடன் முக்கூட்டு ஒப்பந்தம்



இலங்கை மற்றும் தன்சானியாவிற்கு இடையில் மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

தன்சானியா செல்வதற்கான விசா நடைமுறையில் தளர்வு, உளவுப் பிரிவு மற்றும் பாதுகாப்புத் துறையினருக்கு இடையிலான ஒத்துழைப்புகள் மற்றும் கலாசார ஒத்துழைப்புக்கள் தொடர்பிலேயே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தன்சானியாவிற்கான விஜயத்தின் ஒரு அங்கமாக இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக, ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஜனாதிபதி

19 ஆம் பக்கம் பார்க்க

# '13'குறித்து அரசுடன் பேசத் தயார்; கூட்டமைப்பின் பிந்திய அறிவிப்பு

## தெரிவுக்குழுவில் இணைவது குறித்து முடிவில்லை



(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் திகதி திட்டவட்டமாக அறிவிக்கப்பட்ட பின்னரே தெரிவுக்குழுவில் பங்குபற்றுவது குறித்த தீர்க்கமான முடிவைத் தாம் அறிவிக்கவிருப்பதாகக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை 13 ஆவது திருத்தம் உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு விஜயம் செய்துள்ள தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் இப்ராஹிமை இரண்டாவது தடவையாகச் சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். எனினும், அரசாங்கம் தம்மைப் பிழையாக மீண்டும் வழிநடத்தி விடக்கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மாணவி மீது தடியடி ஆசிரியர் மீது நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் மாணவி ஒருவரைத் தடியினால் தாக்கிய அக்கல்லூரியின் சித்திர பாட ஆசிரியர் மீது கரைச்சி கோட்டக் கல்விப் பணிமனை விசாரணை நடத்தியதுடன், அந்த ஆசிரியரைத் தற்காலிகமாக கரைச்சிக் கோட்டக்கல்விப் பணிமனையில் இணைத்திருப்பதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு யாழ்.காரியாலய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் நடமாடும் சேவை நடைபெற்றது. இதன்போது விசாரணை ஒன்

19 ஆம் பக்கம் பார்க்க

## பூநகரி தவிசாளருக்கு எதிராக பொதுமக்கள் திரண்டு போர்க்கொடி

### நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கும் முஸ்தீபு



(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் தவிசாளரின் முறைகேடான நடவடிக்கைகளைக் கண்டித்து பொதுமக்களும், ஊழியர்களும் ஒன்று திரண்டு பெரும் கண்டனப் போராட்டம் ஒன்றை நேற்று நடத்தியுள்ளனர்.

இப்போராட்டத்தின் முடிவில் தவிசாளரை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலமாக பதவியில் இருந்து அகற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு ஆரம்பமான தவிசாளருக்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டம் பிற்பகல் மூன்று மணி வரை பூநகரி பிரதேசசபை முன்றலில் இடம்பெற்றது இதில்

19 ஆம் பக்கம் பார்க்க

## மதுபோதையில் சாரதி; மயிரிழையில் தப்பினர் பயணிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை காரைநகர் சாலைக்குச் சொந்தமான பேருந்து சாரதி ஒருவர் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், பேருந்தில் பயணித்த பயணிகள் பிறிதொரு பேருந்தில் பயணத்தை மேற்கொள்ள, குறித்த காரைநகர் சாலைக்குச் சொந்தமான பேருந்து பொலிஸாரினால் கைப்பற்றப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் ஜனநாயகப் பண்புகளை மேலும் பலப்படுத்த உதவுவோம்

### கமலேஷ் சர்மா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகப் பண்புகளை இலங்கையில் மேலும் பலப்படுத்துவதற்கு பொதுநலவாய அமைப்பு தொடர்ந்து பணியாற்றும் என்று அதன் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தூரத்தில் இருந்து விமர்சிப்பதை தவிர்த்து, நடைமுறைக்குச் சாத்தியமான மாற்றத்தை ஏற்படுத்த பொதுநலவாய நாடுகள் முயற்சிப்பதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா மேலும் தெரிவித்துள்ளார். வெளிநாட்டு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை செயற்படுத்த இன்னும் பல திட்டங்களை செயற்படுத்த இலங்கை வேண்டியுள்ளது. ஆணைக்குழுவின் அறிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்தம்பித்தது பங்குச்சந்தை

கணனி மென்பொருளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் கொடுக்கல் மற்றும் வாங்கல் நடவடிக்கைகள் தற்காலிகமாக நேற்று நிறுத்தப்பட்டன. தானியங்கும் வியாபார முறைமையில் வாடிக்கையாளர்களின் மீதிகள் தவறாக காட்டப்படுவதால் பிரச்சினை தோன்றியது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கத்தோலிக்க மாணவர்களுக்கான இறுதிச்சான்றிதழ் பரீட்சை

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் கத்தோலிக்க மறைப்பாடசாலை மாணவர்களுக்கான இறுதிச் சான்றிதழ் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை ஒக்ரோபர் 2013இல் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் நடைபெறும். மறைப்பாடசாலையில் பத்தாம் தரத்தில் சித்திபெற்றுஇறுதி நற்சான்றுபத்திர வகுப்பில் இரு வருடம் கல்வி பயின்றிருத்தால் விண்ணப்பிக்கலாம்.

இதற்கான விண்ணப்பங்களை 12.07.2013க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவேண்டும்.

பரீட்சைக்கட்டணங்கள், அனுமதி அட்டைபெறல், அடையாள அட்டை நற்சான்றிதழ் பத்திரம், மற்றும் விடைத்தாள் மீள் பரிசீலனைபோன்ற விபரங்களை 28.06.2013 அரச வர்த்தகமானியை பார்வையிடலாம்.

காத்தோலிக்க மறை பரீட்சை 2007ஆம் ஆண்டிலிருந்து நடாத்தப்படும் 4 வினாத்தாள்களை கொண்டதாகும். இப்பரீட்சை வடக்கில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த யாழ்ப்பாணம், மானிப்பாய், பருத்தித்துறை, நெடுந்தீவு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, முழங்காவில், மன்னார், முருங்கன், ஆண்டாங்குளம், பெரிய பண்டிவிரிச்சான், வவுனியா ஆகிய இடங்களில் பரீட்சை நடைபெறும். (105)


ஒன்பது வருடங்களின் பின்னர் மீண்டும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்

ஞான சௌந்தரி
(இசை நாடகம்)

1991ஆம் ஆண்டிலும், 2004 ஆம் ஆண்டிலும் திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் யாழ். நகரில் மேடையேற்றப்பட்டு அனைவரது மனங்களிலும் நிறைந்து பாராட்டுக்களைப் பெற்ற

ஞானசௌந்தரியை
மீண்டும் ஒருமுறை பார்த்திட அரிய சந்தர்ப்பம்
காலம்:– ஜூன்30, ஜூலை 01 2013(ஞாயிறு, திங்கள்)
நேரம்:– மாலை 6.45 மணி
இடம்:– திருமறைக்கலாமன்ற அரங்கு

ஆசனங்களுக்கானபதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்,

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.021 222 2393 (C/2890) திருமறைக் கலாமன்றம்



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 968
திகதி 27.06.2013

வெற்றி எண்கள்: 11 13 16 57
ஆங்கில எழுத்து: L

ஜக்பொட் பரிசு ரூ.1,00,00,000/= வெற்றி பெற்றுள்ளார்

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,00,00,000/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 0 | 10,00,000/= | ரூ. - |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | ரூ. 7,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 266 | 1,000/= | ரூ. 2,66,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 457 | 1,000/= | ரூ. 4,57,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12034 | 60/= | ரூ. 7,22,040/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6200 | 40/= | ரூ. 2,48,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 157350 | 20/= | ரூ. 31,47,000/= |
| ஆங்கில எழுத்து | 23010 | 20/= | ரூ. 4,60,200/= |
| | | மொத்தம் ரூ. | 60,50,240/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 64,50,240/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.


| | |
|---|---|
| இரத்தினபுரி | 704406239-3-33 |
| கொழும்பு | 704407759-7-47 |
| அம்பாறை | 704409509-6-26 |
| கண்டி | 704407207-8-28 |
| மட்டக்களப்பு | 704410505-8-48 |
| வவுனியா | 704405986-0-10 |
| கம்பஹா | 704411351-5-15 |
| மாத்தறை | 704402787-9-09 |

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 10,307,660/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.07.01 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, சுகாதிநி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333516/7
(C/2891)


# மின்சார விநியோக நடவடிக்கைகள் கிளிநொச்சியில் விஸ்தரிக்கப்படும்



கிளிநொச்சி மாவட்டத்தின் மின் விநியோக நடவடிக்கைகள் மேலும் பரவலாக விஸ்தரிக்கப்படும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி தருமபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றத்திற்கு பின்னரான நான்காண்டுகளுக்கு கணிசமான அளவு பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது பெருமளவான பிரதேசங்களுக்கு உயரழுத்த மின்சாரம் கொண்டு செல்லப்பட்டுள்ளது இதுவரைக்கும் ஆறாயிரம் கோடிக்கு மேல் மின்சார விநியோக நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ளது வரலாற்றில் மின்சாரமே இல்லாத பல பிரதேசங்களுக்கு மின்விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது இனிவரும் காலங்களில் பெருமளவுக்கு தாழுத்த மின்விநியோக நடவடிக்கைகளே மேற்கொள்ள வேண்டியுள்ளது அந்த பணிகளும் மேலும் பரவலாக விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

தருமபுரம் மகாவித்தியாலயத்தில் கணித விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டது போன்று பாடசாலையின் பெயரை தர்மபுரம் மத்திய கல்லூரியாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன், தர்மபுரம் மகாவித்தியாலயத்தின் அதிபர் பூலோகராசா, பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஸ்ரீபன், குடியேற்ற உத்தியோகத்தர் விமலநாதன், கிராம அலுவலர் பிரதேச பொலீஸ் அதிகாரி ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் பிரதேச அமைப்பாளர் செல்வம் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## உயர்தரத்தில் 3ஏ பெற்றமாணவனுக்கு கண்பார்வை கிடைக்க சத்திர சிகிச்சை

(திருநெல்வேலி)

பார்வை இழந்த நிலையிலும் க.பொ.த உயர்தரத்தில் மூன்று ஏ.சித்திகளைப் பெற்று சாதனை படைத்த சொர்ணலிங்கம் தர்மதனுக்கான ஒரு கண்பார்வை கிடைப்பதற்கான சத்திர சிகிச்சை மும்பய் வைத்தியசாலையில் முடிவடைந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை அவர் தனது தந்தையாருடன் நாடுதிரும்பியுள்ளார். மீண்டும் எதிர்வரும் ஆவணிமாதம் முதல் வாரத்தில் இரண்டாவது சத்திர சிகிச்சைக்காக அவர் மும்பாய் செல்லவுள்ளார். இதற்குப் பின்னர் தர்மதன் ஒரு கண்பார்வையைப்பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாணவனின் சிகிச்சைக்கான செலவுகளை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தனது நிதியிலிருந்து வழங்கியுள்ளார். முதற்கட்டக்கொடுப்பனவு கொடுக்கப்பட்டு விட்டது. இரண்டாம் கட்டம் கொடுக்கப்படவுள்ளது.

மாணவன் தர்மதன் பத்து வயதாக இருக்கும் போது ஏற்பட்ட பொக்கிழிப்பான் நோயின் காரணமாக அவரது இரண்டு கண்களும் பர்வையை இழந்தன. இருந்தும் தனது விடாமுயற்சியினாலும்அவர துகுடும்பத்தினரின்அயராத உழைப்பினாலும் சுன்னாகம், வாழ்வகம், மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று இம்மாணவன் க.பொ.த உயர்தரத்தில் மற்றைய மாணவர்களுடன் போட்டியிட்டு மூன்று ஏ சித்திகளைப்பெற்று சாதனை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

## காணாமல் போனவர்களை கண்டறியும் குழு வருகை

காணாமல் போனவர்களை கண்டறிவதற்கான குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகைதரவுள்ளனர்.

வவுனியா, கிளிநொச்சிப் பிரதேசங்களை அடுத்து இன்று யாழ்ப்பாணத்தில் யுத்த காலத்தில் காணாமல் போனவர்களது உறவினர்களை சந்திப்பதற்கு கொழும்பில் இருந்து குழு ஒன்று வருகைதர இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொய்யாத் தோட்டத்தில் பாற்குளம் என்ற குளத்தையண்டிய பகுதியில் வசிக்கும் பி. சங்கர் என்பவரது இல்லத்தில் இவர்கள் உறவினர்களை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உறவினர்கள், காணாதுபோனவர்களின் ஆவணங்கள் ஆவண பிரதிகளுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். காலை 8 மணிக்கு இவ்ஆர்வலர் குழுவினர் தமது விசாரணைகளையும் ஆய்வையும் மேற்கொள்வர்என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (23)



சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் வடக்கு சமுர்த்தி செயலணியினரால் நடத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியில் வெற்றியீட்டியோர் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டதைக் காணலாம். (26)

# தமிழ் வளர்த்த பெரியோரை இளம் சமூகத்தினர் போற்றவேண்டும்

## தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மிகவும் பின்தங்கிய பிரதேசமான நெடுந்தீவில் பிறந்து தமிழ்மொழியை உலகலாவிய ரீதியில் நிலைநிறுத்திய பெருமைக்குரியவர் தனிநாயகம் அடிகளார். இத்தகைய தமிழை வளர்த்த பெரியோர்களை இன்றைய சமூகத்தினர் மதித்துப்போற்ற வேண்டும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோன். குயின்ரஸ் தெரிவித்தார்.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தமிழ்த் தூது தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

கத்தோலிக்க திருச்சபை தமிழ்மொழிக்கு ஆற்றிவரும் பணி அளப்பரியது. இவர்களே உலகளாவிய ரீதியில் தமிழ் மொழியைப் பெருமைப் படுத்திய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளுக்கு நூற்றாண்டுவிழா எடுக்க வித்திட்டனர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும், யாழ். மறைமாவட்டமும் இணைந்து நாட்டின் பல பாகங்களிலும் அடிகளாருக்கு விழா எடுத்து வருகின்றனர். இன்று இவர்களுடன் இணைந்து நெடுந்தீவு மக்கள் தனிநாயகம் அடிகள் பிறந்த மண்ணில் பெருவிழா எடுப்பது பெருமைக்குரியது தனிநாயகம் அடிகளார் பல்வேறு மொழிகளையும் கற்றுத் தேறியவர். தான் பெற்றிருந்த மொழிப் புலமையினால் தமிழ் மொழியை உலக அரங்கில் எடுத்துச்சென்று பெருமைப்படுத் தியவர். 100 ஆண்டுகள் கடந்தும் அவரை நினைவுகூர்ந்து விழா எடுக்கின்றோம். என்றால் அவர் காலத்தை வென்றவர்.

தமிழ்மொழியில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்ட அடிகளார் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளை நடத்துவதற்கு முன்னின்று உழைத்த பெரியார் எனவே இன்றைய இளைய தலைமுறையினர் தமிழ் வளர்த்த மெய்யடியார்களைப் போற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (10)

# நிர்வாகசபை தெரிவு

குடமியன் புனைவேலி சனசமுக நிலைய 2013 ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் சனசமூக நிலையக் கட்டடத்தில் இடம்பெற்றது. இதில் தலைவராக கா.ராஜ்மோகன், செயலாளராக சு.சுதாகர், பொருளாளராக த.கண்ணகுமார், உப தலைவராக சு.மேகலா, உபசெயலாளராக சி.கிருஷ்ணவேணி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 5 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (130)

# மின்சார சபைக்கு புதிய கட்டடம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை மின்சாரசபையின் மாடிக்கட்டடம் 120 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாமாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கல்லூரி வீதியில் நகரசபைக்கு அண்மையில் பழைய மின்சார நிலையம் இருந்த காணியிலே இப்புதிய கட்டடம் மின்சார சபையினரால் கட்டப்பட்டுள்ளது.

இதற்கான நிதியை இலங்கை மின்சாரசபை ஒதுக்கீடு செய்துள்ளது. இவ் அலுவலகம் விரைவில் திறந்துவைக்கப் படவுள்ளதுடன் இதனால் வடமராட்சி மக்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (109)

# சாதாரண தர மாணவர்களுக்கு விஞ்ஞானபாட கற்றல் கையேடு

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் விஞ்ஞானக் கல்விப் பிரிவினரால் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள தரம் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவு மட்டத்தை மேம்பாடடையச் செய்யும் வகையில் விஞ்ஞான பாடத்திற்கான விசேட செயற்றிட்டத்தின் கீழ் விஞ்ஞான கற்றல் கையேடு தயாரித்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தரம் 10 மற்றும் 11 ஆம் வகுப்புக் களிற்குரிய பாடப்பரப்புக்களை உள்ளடக்கியதாக உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் எனத் தனித்தனியாக பாடப்பரப்பின் விடயச் சுருக்க விபரணங்களுடன் அப்பாடங்கள் சம்பந்தமாக கடந்த 05 வருட காலங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் வெளிவந்த பல்தேர்வு வினாக்கள், அமைப்புக் கட்டுரை வினாக்கள், கட்டுரை வினாக்கள் ஆகியவற்றினையும் உள்ள டக்கியதாக வலயக்கல்விப் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் கதிர்காமநாதன் தலைமையில் துறைசார் ஆசிரிய ஆலோசகர்கள், மற்றும் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர்களின் முயற்சியினால் இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இக்கையேடுகள் அச்சிடும் பணிகள் பூர்த்தியடைந்ததும் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் மாணவர்களின் தொகைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் விஞ்ஞான பாடக் கல்விப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (03)

# சபை நிதியில் நவீன சந்தை

(கரணவாய்)

நெல்லியடி நகரப் பகுதியில் அமைந்துள்ள பழைய சந்தையின் பின்பகுதி உடைக்கப்பட்டுப் புதிதாக கடைகளும் நவீன சந்தையும் கட்டப்படவுள்ளது.

கரவெட்டி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் நிதியில் இருந்தே இவை கட்டப்படவுள்ளதுடன் கழிவு வாய்க்கால்களும் கட்டடப்படவுள்ளதாகவும் இதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (18)

# வீதி அகலிப்புப் பணிகளுக்காக மின்சார விநியோகம் தடை


(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் அச்சுவேலி, இடைக்காடு, பததமேனி, வளலாய், தொண்டமனாறு வீதிப் பிரதேசம், இளவாலை, மாதகல், சில்லாலை, சுழிபுரம், விளான், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமனாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஆவரங்கால், புத்தூர், அச்சுவேலி, வல்லை, புறாப்பொறுக்கி, பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, விஞ்ஞானபீடப் பிரதேசம், அரசடி வீதி, கொழும்புத்துறை வீதி, ஈச்சமோட்டை, பாசையூர், குருநகர், கந்தர்மடம், ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, வேம்படிப் பிரதேசம், கொன்வென்ட் பிரதேசம், பிரதான வீதி, குருநகர், யாழ். பட்டணப்பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை, 03 ஆம் திகதி புதன் கிழமை, 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும், அமபன், குடத்தனைப் பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். என யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# முள்ளிவாய்க்கால் மக்களுக்கு நிறுவனங்களின் உதவிகள்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்குப் பகுதியில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு சோபா (zoa), யு.எஸ் எயிட் (USAID) நிறுவனங்களினால் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம மக்களில் 100 குடும்பங்களுக்கு மேற்படி நிறுவனங்களின் நிதியுதவியுடன் ஒரு குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் மக்களின் தேவைக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டுள்ளன. இதன்படி கடற்றொழில், விவசாயம், கடை, தையல், போன்ற தொழில்களுக்கான உபகரணங்கள் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகத்தினால் வைபவ ரீதியாக கிராம மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இதில் நிகழ்ச்சி முகாமையாளர் நைல்த், திட்ட இணைப்பாளர் றொனி, கிராம சேவையாளர் புஸ்பராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். (40)



கோ. வல்லையூரானின் 'கம்பிகளின் மொழி' கவிதை நூல் வெளியீட்டுவிழா அண்மையில் வல்வெட்டித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றபோது நூலாசிரியரின் பாரியார் புனர்வாழ்வு பெற்றவர்களுக்கான யாழ். மாவட்ட இணைப்பாளர் மேஜர் ஜெயரட்ணவுக்கு நூலின் முதற்பிரதியை கையளிப்பதையும், நூலாசிரியர்களுடன் கலந்துகொண்டவர்கள் நிற்பதையும் காணலாம். (116)

உன்னைப் போல் உன் அயலவனையும் நேசித்து இறைவனுக்கு உகந்தவர்களாக வாழுங்கள். - இயேசுநாதர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வடிவேலுவின் ரசிகர்கள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இங்கிருந்து வெளிநாடுகளுக்கு புறப்படும்போது, "ஐயா வெளிக்கிடுறார்... ஐயா வெளிக்கிடுறார்" எனறு தண்டோராப் போடாத குறையாக என்னமோ பெருஞ் சாதனை நிகழவிருப்பதாக எழுதித்தள்ளும் தமிழ் ஊடகங்கள், அவர்கள் திரும்பிவரும்போது, போய் என்ன சாதித்துவிட்டு வருகிறார்கள் என்பது பற்றி மூச்சு விடுவதில்லை.

இலங்கை அரசை ஒரு கை பார்க்கப்போவதாக மன்மோகன் சிங் உறுதியளித்தார் என்றோ ஒபாமா கையிலடித்துச் சத்தியம் செய்தார் என்றோ ஒரு பொத்தாம் பொதுவான அறிவிப்பை விட்டால் முடிந்துவிடுகிறது அலுவல். இந்தியப் பிரதமரோ அமெரிக்க ஜனாதிபதியோ இந்த அறிவிப்புகளைக் கண்டுகொள்ள மாட்டார்கள்; அதனால் இஷ்டத்திற்கு எதையாவது விளாசி மக்களைப் புல்லரிக்கவைத்துப் பிழைப்புப் போகிறது தலைவர்களுக்கு!

அவர்களும் பெரியமனிதத் தோரணையோடு என்ன கதைத்தது என்பதை வெளியிடாமல்... இவர்களும் தேள்கடி வாங்கிய திருடர்கள்போல் பம்மியபடி திரும்பிவருகிறார்கள் என்றால், ஏதோ முறையாக 'டோஸ்' வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று, பழைய அனுபவங்களை வைத்து நாமாக ஊகித்துக் கொண்டுவிட வேண்டியதுதான்.

இத்தனை காலமாக இவர்களது தகிடுதத்தங்களைப் பார்த்து வருகிறவர்களுக்கு, இவர்கள் வீரவசனங்களைச் சற்று நிறுத்திக் கமுக்கமாயிருக்கிறார்கள் என்றால் போன இடத்தில் ஏதோ கசப்பு மருந்தை விழுங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை விளங்கிக்கொள்ளலாம்தானே! கூட்டமைப்பினருக்குக் கசப்பு மருந்து எதுவென்றால், யதார்த்தச் சூழலுக்கேற்பப் பேசுங்கள் என்ற அறிவுரைதான்.

கூட்டமைப்பினரின் நிலையை யோசித்துப் பாருங்கள். 13வது திருத்தம் கால்தூசுக்கும் பெறுமதி இல்லை என்றே மக்களுக்கு அடித்துச் சொல்லி வைத்திருக்கிறார்கள். இப்போ, அதிலிருந்தே பேச்சை ஆரம்பியுங்கள் என்று சொன்னால் அவர்கள் என்னதான் செய்வார்கள்? தமிழ்மக்களை ஆவேசப்படுத்தத் தக்கதாய் அரசு ஏதாவது செய்யாதா என்று கமுக்கமாய்க் காத்திருக்கத்தானே வேணும்?

பதின்மூன்றாவது திருத்தத்தை இலங்கை அரசு வலுக்குறைப்புச் செய்வதை நிறுத்தச் சொல்லுங்கள் என்று அழுதுகொண்டே சென்றவர்களிடம் இந்தியா வேறென்ன சொல்லியிருக்கப் போகிறது? "அங்கே அரசாங்கத் தரப்பில் உள்ளவர்களே கணிசமானோர் உறுதியாக நின்று வலுக்குறைப்பை நிறுத்தியிருக்கிறார்கள். போங்கள், தெரிவுக்குழுவிற்குப் போய் அவர்களுடன் இணைந்து பேசுங்கள். பேச்சை ஆரம்பியுங்கள். பதின்முன்றாவது திருத்தத்தை வலுவாக்கிக் கொள்ளலாம், போங்கள்" என்று வழக்கம்போல இதமாகச் சொல்லியனுப்பியிருப்பார்கள்.

இவர்களும் வழக்கம்போல மீசை மண்ணைத் தடவி விட்டுக் கொண்டே, "வலுக்குறைப்பைத் தடுத்து நிறுத்த மன்மோகன் சிங் உறுதி" என்ற 'வெற்றி அறிவிப்பை' அங்கிருந்தபடியே தங்கள் கட்சிப்பத்திரிகைக்குத் தெரிவித்துவிட்டு வந்திறங்கியிருக்கிறார்கள். இனி, வரும் செப்டெம்பர் தேர்தலுக்கு மேடைகளில், "ஒற்றுமையாக உங்கள் வாக்குப்பலத்தை நமக்கே தந்து காட்டினீர்கள் என்றால், தேர்தல் முடிந்த மறுநாள் மன்மோகன்சிங் வந்திறங்குவார். மகிந்தவின் காதை முறுக்கிக் காரியம் முடித்துத் தருவார்... ஒற்றுமை, அதுதான் முக்கியம். ஒற்றுமையை நீங்கள் காட்டாவிட்டால் தமிழினமே தொலைந்தது..." என்று பயங்காட்டித் தமிழ்மக்களைப் பதைபதைக்க வைப்பார்கள்.

போன வருசம் கிழக்கு மாகாணத் தேர்தல் முடிந்தவுடன் வந்திறங்கப் போவதாகச் சொன்ன சர்வதேசம் இன்னும்தான் வரக்காணோமே என்று நமது மக்கள் யாரும் கேட்கப் போவதில்லை. அப்படியே கேட்டாலும், "அது போன வருசம்... இது இந்த வருசம்" என்பதை அவர்கள் சொல்லாமலே மக்கள் தாமாக புரிந்துகொண்டுவிடுவார்கள். வைகைப்புயல் வடிவேலுவின் ரசிகர்கள்தானே நாமெல்லோருமே!

- ஆசிரியர்

# 89 இலட்சம் ரூபா மோசடி; சந்தேக நபர்கள் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

நம்பிக்கை மோசடி, மற்றும் காசோலை மோசடி மூலம் 89 இலட்சம் ரூபா வரையில் பணத்தை இழந்தவர்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு பொலிஸ் நிலையங்களிலும் இவ்வாரத்தில் முறையீடு செய்துள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜிப்றி தெரிவித்தார். யாழ் பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாராந்த பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் சின்னட்டிப் பகுதியில் புதிய வீடு வாங்கித் தருவதாகக்கூறி 40 இலட்சம் ரூபா பணமோசடி செய்ததாக முறையிடப்பட்டுள்ளது. அத்துடன் நெல்லியடிப் பகுதியில் 12 இலட்சம் ரூபா காசோலை மோசடி மேற்கொள்ளப்பட்டதாக கடந்த 22 ஆம் திகதி நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. அதேவேளை போலித் தங்க நகைகளைக் கொடுத்து 5 இலட்சம் ரூபா மோசடி செய்த நபர் குறித்தும் நெல்லியடி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. அத்துடன் இத்தாலி நாட்டுக்கு கூட்டிச் செல்வதாகக் கூறி 20 இலட்சம் ரூபாவினை நபர் ஒருவர் மோசடி செய்துள்ளதாக அச்சுவேலி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

யாழ். பொலிஸ் பிரிவில் 12 இலட்சம் ரூபா பெறுமதியான புகைப்பொருட்களைக் கொள்வனவு செய்து விட்டு நம்பிக்கை மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது. இவ்வாறு பொலிஸ் நிலையங்களில் முறையிடப்பட்ட பொழுதிலும் இச்சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அண்மைக்காலமாக அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் கடந்த 6 மாத காலத்துக்குள் இடம்பெற்ற வீதி விபத்துக்களின்போது பெருமளவானோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்களிலேயே அதிகமானவர்கள படுகாயமடைந்துள்ளனர் என யாழ். பொலிஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிகாரி விக்கிரம ஆராய்ச்சி தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது ஏற்படும் வீதி விபத்துக்கள் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டில் தற்பொழுது அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் இவ் வீதி விபத்துக்களைக கட்டுப்படுத்துவதற்காக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கான பரீட்சைகள் நடைபெறும்போது பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வாய்மொழிப் பரீட்சையும் நடத்தப்படும். இதன்போது எழுத்துப் பரீட்சையில் மட்டும் சித்தியடைந்துவிட்டு வாய்மொழிப் பரீட்சையில் சித்தியடையத் தவறினால் குறித்த நபருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட மாடடாது. அவர் மீண்டும் தகுதிகாண பரீட்சையை எழுதவேண்டும்.

18 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் மோட்டார் சைக்கிளை வீதியில் செலுத்தினால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றது. குறித்த நபர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுகின்றது. இதனால் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியும் என்றார்.

# தேசமான்ய விருது இன்று இரத்தினபுரியில்

இவ் வருட தேசமான்ய விருது வழங்கும் நிகழ்வு இரத்தினபுரியில் இடம் பெறுகின்றது. இன்று மதியம் 1.30 மணிக்கு இந்நிகழ்வு இரத்தினபுரி மாநகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் இவ்விருது வழங்கப்படுகின்றது. இதில் யாழ்.நல்லை ஆதீன பிரதம சிவாச்சாரியார் கலாநிதி து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் விருது பெறுகின்றார். விருது பெறுவோருடன் இருவர் மட்டும் இவ்விழாவில் கலந்துகொள்வதற்கான அனுமதி அட்டைகளும் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (இ)

# பல்வேறு குற்றச் செயல்கள், கைது செய்யப்பட்டோர் நீதிமன்றில்

பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் சந்தேகத்தின்பேரில் 205 பேர் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளதாக யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகா தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், யாழ் பொலிஸ் பிரிவில் பொருட்களைச் சேதப்படுத்திய ஒருவரும், அடித்துக் காயப்படுத்தியதாக 37 பேரும், சந்தேகத்தின் பேரில் 7 பேரும், களவுப் பொருட்களுடன் ஒருவரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டோர் 25 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 17 பேரும், வீதி விபத்தின் மூலம் ஒருவரும், அனுமதி அற்ற மதுபானம் விற்ற 9 பேரும், வீட்டினுள் அத்துமீறி நுழைந்த 4 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 15 பேரும், சந்தேகத்தின் பேரில் 11 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்தியதாக 6 பேரும், ஏனைய குற்றங்களுக்காக 55 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# திருச்சொரூப பவனி

(ஆனைக்கோட்டை)

நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலய திருச்சொரூப பவனி இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய பங்குத்தந்தை தலைமையில் இடம்பெறும். இவ்வாலய திருவிழா கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் வரை திருவிழா நடைபெற்று வருகின்றது.

இதேவேளை மடுமாதா தினத்தை முன்னிட்டு வழமைபோல் இம்முறையும் எதிர்வரும் 2 ஆம் திகதி திருச்சொரூப பவனி இடம் பெறும். திருச்சொரூபத்தினை திருமணமாகாத கன்னிப்பெண்கள் வடம்பிடித்து இழுத்துச் செல்வார்கள். (104)

# கைப்பொருள் கண்காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பூவேந்தர் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மாணவர்களது கைப்பொருள் கண்காட்சி இன்று காலை 10.00 மணிக்கு நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

■ அ.மார்க்ஸ் கட்டுரையிலிருந்து ■



# இந்திய - சீன உறவின் அவசியம்

கடந்த ஏப்ரல் 15 தொடங்கி மே 5 வரை சரியாக மூன்று வார கால எல்லை முறுகலுக்குப் பின் பெரிய பிரச்சினைகள் ஏதுமின்றி இந்தியா - சீனப் படைகள் இரண்டும் தத்தம் பழைய நிலைக்குத் திரும்பியுள்ள பின்னணியில் திட்டமிட்டபடி சென்ற 19ஆம் திகதி சீனப் பிரதமர் லீ கெகியாங்கின் இந்திய வருகை நடந்துள்ளது. சமீபத்திய இந்த எல்லை முறுகல், பேச்சுவார்த்தைகளையும் இந்திய சீன உறவையும் பெரிய அளவில் பாதித்து விடவில்லை என்பது ஆறுதலை அளிக்கிறது. எல்லைப் பிரச்சினைகளில் "சிறப்புப் பிரதிநிதிகளின்" பேச்சுவார்த்தைகள் மூலம் "முன்னேற்றம் காண்போம்" என அறிவிக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை குறித்துத் தீர்மானகரமாக எதுவும் சொல்லப்படவில்லை என்றாலும், எல்லைப் பிரச்சினைத் தீர்வில் முன்னேற்றம் காணாமல் இந்திய - சீன உறவு விசாலிப்பிற்கு வாய்ப்பில்லை என்பதை இரு தரப்பும் உணர்ந்துள்ளது விளங்குகிறது.

வளமான கலாசாரப் பாரம்பரியமும், மிகப் பெரிய மக்கள் தொகை வளமும் கொண்ட இவ்விரு அண்டை நாடுகளின் நட்பு உலக அரசியலில் பாரதூரமான விளைவு-களை ஏற்படுத்த இயலும் என இரு நாடுகளும் உணர்ந்துள்ளன. சுமார் எட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அணு ஆற்றல் மற்றும் கடற்கொள்ளைகளைத் தடுப்பதில் ஒத்துழைப்பு, நதி நீர்ப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தைகளைத் துரிதப்படுத்துவது முதலியன குறித்தும் முடிவெடுக்கப்பட்டுள்ளன. இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பது குறித்த பிரதமர் லீயின் வாக்குறுதியும், "பிற நாடுகளின் மீதான மேலாண்மை என்கிற அழிவுப் பாதையை நாங்கள் தேர்ந்தெடுக்க மாட்டோம்", "இந்தியாவும் சீனமும் ஒன்றாக இருக்க விதிக்கப்பட்ட நாடுகள்" என்பது போன்ற அவரது பிரகடனங்களும் நம்பிக்கை ஊட்டக் கூடியதாக உள்ளன.

காஷ்மீரிகளுக்கு சிறப்பு விசாக்களை அளித்ததும், சென்ற மாதத்தில் லடாக்- டெப்சாங் பகுதியில் மேற்கொண்ட ஊடுருவலும் சீன அரசின் நோக்கங்கள் குறித்து ஏற்படுத்தியிருந்த அய்யங்களை பிரதமர் லீயின் வருகை ஓரளவு போக்கியுள்ள போதிலும், எந்த அளவிற்கு இந்த நட்பு உறுதியாக நிற்கும் என்பது குறித்த அய்யம் முற்றாக நீங்கிவிடவில்லை. குறிப்பாக இந்திய ஊடகங்கள், இடதுசாரிகள் தவிர்த்த பிற அரசியல் கட்சிகள் ஆகியன சீன நட்பை நம்பத் தயாராக இல்லை. கடந்த ஏப்ரல் மாதச் "சீன ஊடுருவலை" இந்தியத் தரப்பு எதிர்கொண்ட விதம் இதை உறுதிப்படுத்துகிறது.

சென்ற ஏப்ரல் மத்தியில் காஷ்மீருக்குக் கிழக்கே உள்ள "லடாக் - அக்சாய் சின் "நடைமுறைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு" (Line of Actual Control) 19 கி.மீ தெற்கில், "இந்தியப் பகுதிக்குள்" சீனப் படையின் ஒரு சிறு பிரிவு உள்நுழைந்து 5 தற்காலிகக் கூடாரங்களை அமைத்துத் தங்கியது, இதில் ஏழு சீனப் படை வீரர்களும் ஒரு நாயும் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. இது தனது கவனத்திற்கு வந்த அடுத்த ஆறு மணி நேரத்திற்குள் இந்தச் சீன "முகாமிற்கு" நேர் எதிராக 300மீ தொலைவில் இந்தியப் படைகள் ஒரு கூடாரத்தை அமைத்தன.

இந்திய - சீன அரசுகளும், இப்பிரச்சினையைக் கையாண்ட இரு தரப்பு அயலுறவு அதிகாரிகளும் ஆரம்பம் முதல் மிகப் பொறுமையாகவும், பிரச்சினையை அடுத்த கட்டத்திற்கு முற்ற விடாமலும் அணுகினர் என்றபோதிலும் ஊடகங்களும் எதிர்க் கட்சிகளும் அப்படி அத்தகைய நிலை எடுக்கவில்லை.

பிரதமர் மன்மோகன் சிங் இது அங்குள்ள ஒரு உள்ளகப் பிரச்சினை (local problem) என்றார். இப்பிரச்சினை கையை விட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ளும் அளவிற்கு இரு நாடுகளுக்கும்போதிய அறிவு முதிர்ச்சி உள்ளது எனச் சீன வெளியுறவு அமைச்சகத்தின் சார்பாக உயரதிகாரி ஹுவா சுன்யிங் கூறினார். மன்மோகனின் கூற்றை வரவேற்ற சீனா,"இந்தியாவுடன்இணைந்து செயல்பட்டு எல்லைப் பிரச்சினையத் தீர்க்கத் தயார் என அறிவித்தது. பிரச்சினை ஒரு பக்கம் நடந்துகொண்டிருந்தபோதே கடந்த ஐந்தாண்டுகளில் முதன்முறையாக நடக்க உள்ள இரு நாட்டு இராணுவங்களின் கூட்டுப் பயிற்சி தொடர்பான பேச்சுவார்த்தை நடந்து முடிந் தது. வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பதட்டத்திற்கு இடமில்லை என்கிற ரீதியில் பேசியதோடு, "இது தொடர்பாக இந்தியா எந்தப் "பிரேத பரிசோதனை-யையும்" நடத்தப் போவ தில்லை" எனவும் தெரிவித்தார். வரவுள்ள சீனப் பிரதமரின் வருகை குறித்துத் திட்டமிட குர்ஷித் ஒருமுறை பெய்ஜிங்கும் போய்வந்தார். அதே நேரத்தில் இரு இராணுவப் பிரிவுகளுக்கும் இடையில் கொடிச் சந்திப்புகள், பல்வேறு மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் ஆகியன நடத்தப்பட்டு, தற்காலிகமாக உருவான இப்பிரச்சினை தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

**பேச்சுவார்த்தைகளை அவசரமின்றியும், பொறுமையுடனும் தொடருதல் அவசியம். பிரச்சினைகள் உள்ளதை ஏற்று இரு தரப்பும் செயற்படுதல் ஒரு முன் நிபந்தனை. தேசபக்தக் கூச்சல் போருக்கும், மிகப் பெரிய இழப்புகளுக்குமே வழி வகுக்கும்.**

இரு நாடுகளும் இப்போதைக்குப் பிரச்சினையை முற்ற விடுவதற்கோ, போர் என்கிற அளவிற்குக் கொண்டு செல்வதற்கோ தயாராக இல்லை என்பது விளங்கியது. அப்படி ஏதும் ஏற்பட்டால் அது இரு நாடுகளுக்கும் பேரழிவில்தான் முடியும் என்பதை இரு நாடுகளுமே உணரும் அளவிற்கு அறிவு முதிர்ச்சி பெற்றுள்ளதும் தெளி-வாகியது.

எனினும் இந்திய ஊடகங்களும்,எதிர்க் கட்சிகளும் இத்தகைய அறிவுமுதிர்ச்சியுடன் நடந்துகொண்டன எனச் சொல்ல இயலவில்லை. ஊடகங்கள் இதைப் பெரிய பிரச்சினையாகவும் "ஆக்கிரமிப்பு" என்கிற அளவிலும் முன்வைத்தன. செய்தி விமர்சகர்கள் "சீனச் சீண்டல்" குறித்து ஏராளமான கட்டுரைகளை எழுதினர். இன்னொருபக்கம் பிரதான எதிர்க்கட்சியான பா.ஜ.க இதை இந்தியப் பாதுகாப்புக்கு விடப்பட்ட சவால் எனக் கூறியது. மாநிலங்கள் அவையில் எதிர்க்கட்சித்தலைவராக உள்ள அருண் ஜேட்லி "எமது பொறுமை எல்லை மீறுகிறது" எனச் சொன்னதோடு நிற்காமல், இதை ஒரு "லோக்கல்" பிரச்சினை எனச் சொன்னதற்காக பிரதமர் மன்மோகனையும் கண்டித்தார்.

பா.ஜ.க தவிர இப்போது முலாயம் சிங்கும் இந்தியா போதிய எதிர்வினை ஆற்றவில்லை எனக் கண்டித்தார். "இந்தியா கோழைத்தனமாகவும், பலவீனமாகவும், கையாலாகாத் தன்மையுடனும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது" என்றார். முலாயம் முன்னாள் இந்தியப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாவை இராணுவ ரீதியில் எதிர்கொள்ள வேண்டும் என பா.ஜ.க முதலான கட்சிகளும் சில ஊடகங்களும் சொன்னதில் எந்தப் பொருளுமில்லை. 1962ஐக் காட்டிலும் இந்தியா இப்போது மிகப் பெரிய அளவில் இராணுவ ரீதியில் தன்னை வலுப்படுத்திக் கொண்டிருந்த போதிலும், இன்னும் கூட மலைப்பாங்கான கிளேசியர் பகுதிகளில் இந்தியாவின் இராணுவத் திறன் மற்றும் வலிவு சீனத்துடன் ஒப்பிடும்போது குறைவுதான். இராணுவ நவீனமயமாக்கலில் இந்தியா இன்னும் முழுமை பெறவில்லை. மலைப் போர் ஆயுதங்கள் மற்றும் கனரக ஹெலிகொப்டர்கள் ஆகியன இந்தியாவிடம் போதிய அளவில் இல்லை. திபெத் - சின்சியாங் பகுதியில் சாலைத் தொடர்புகள், ஏவுகணைப்பாதுகாப்புகள், விமான தளங்கள் ஆகியவற்றையும் சீனா வலுப்படுத்தியுள்ளது. திபெத்தைத் தனது கட்டுக்குள் வைத்திருப்பதற்கு இவைஎல்லாம் சீனாவுக்கு மிக முக்கியம்.

தவிரவும் சீனாவின் இந்த "உள் நுழைவு" எந்தவகையிலும் ஒரு இராணுவ ஆக்ரமிப்பு அல்ல. ஒரு ஏழு வீரர்களை முன்நகர்த்தி அவர்கள் எந்தப் பெரிய போர் முயற்சியையும் மேற்கொண்டார்கள் எனச் சொல்லி விட இயலாது.

பின் அவர்களது நோக்கம்தான் என்ன?

சீனாவின் இன்றைய இந்தச் செயலை விளங்கிக் கொள்ள இந்திய சீன எல்லைப் பிரச்சினையின் சில நுணுக்கங்களை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்திய சீன எல்லைப் பிரச்சினை என்பது பிரிட்டிஷ் ஆட்சி கையளித்துவிட்டுப்போன "சொத்து"க்களில் ஒன்று. 1962இல் இப்பிரச்சினை முற்றி போரில் விடிந்தது. 3000 இந்திய வீரர்களின் சாவு, ஆயிரக்கணக்கான ச.கி.மீ பரப்பு இழப்பு ஆகியவற்றிற்கும் மேலாக முந்தைய 15 ஆண்டுகளில் நேரு போற்றி வளர்த்த இந்திய சீன நட்பும் அழிந்தது. சீனர்கள் அதை ஒரு மிகப் பெரிய வெற்றியாகக் கருதி இன்றுவரை பெருமை கொள்ளாதபோதும் இந்தியா அதை ஒரு பெருந் தோல்வியாகவும், தனது சுயமரியாதைக்கும் கவுரவத்திற்கும் இழைக்கப்பட்ட சவாலாகவும் இன்றுவரை கருதி வருகிறது.

பிரிட்டிஷ் காலனி அரசு 1824 - 26 ஆண்டுகளில் நடைபெற்ற ஆங்கில பர்மிய யுத்தத்தினூடாக பர்மாவைத் (மியான்மர்) தன்னுடன் இணைத்துக் கொண்டது. அதை ஒட்டி அன்று மிக வலுவாக இருந்த பிரிட்டிஷ் பேரரசுக்கும் மிகவும் பலவீனமாக இருந்த சீனாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சினை உருவாகியது. 1913 -14இல் பிரிட்டிஷ் பிரதிநிதி மக்மோகன் பிரிட்டன், திபெத் மற்றும் சீனப் பிரதிநிதிகளுடன் சிம்லாவில் பேச்சுவார்த்தை நடத்தி இந்திய திபெத் எல்லைப் பகுதியை வரையறுத்தார். ஆனால் இந்த வரயறையைச் சீனா ஏற்கவில்லை. ஒப்பந்தத்தில் அது கையெழுத்திடவுமில்லை.எனினும்"மக்மோகன் கோடு" எனப்படும் அந்த எல்லைக் கோட்டையே பிரிட்டி' பேரரசு வடகிழக்குப் பகுதியில் இந்திய சீன எல்லைக் கோடாக வரையறுத்துக் கொண்டது. தான் கையெழுத்திடாத ஒரு ஒப்பந்தத்தை ஏற்க இயலாது என்பதும், அந்நிய நாடுகளுடன் ஒப்பந்தம் ஏதும் செய்து கொள்ளும் உரிமை இல்லாத ஒரு மாநிலமான திபெத் கையொப்பமிட்ட ஒரு ஒப்பந்தத்திற்கு சட்ட ஏற்பு கிடையாது என்பதும் சீன அரசின் வாதம்.

எனவே இதை ஒரு எல்லைப் பிரச்சினையாக ஏற்றுப் பேசித் (negotiate) தீர்க்க வேண்டும் எனச் சீன அரசு 1947 தொடங்கி இந்திய அரசிடம் கோருகிறது.ஆனால் சுதந்திரத்திற்கு முன் பிரிட்டி' காலனிய விரிவாக்க நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து வந்த நேரு, மக்மோகன் கோடுதான் இந்தப் பகுதியில் இந்திய எல்லை என்கிற நிலை-யை எடுத்தார். எனவே இதை ஒரு பிரச்சினையாக ஏற்றுப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள இயலாது. வேண்டுமானால் எல்லைப் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்காமல் வெறுமனே பேசலாம் (talk) என்றார். இப்படி பிரிட்டிஷ் அரசுகையளித்து விட்டுப் போன இந்த எல்லைப் பிரச்சினையை இந்தியா தொடர்ந்து சுமந்தது.


இதற்கிடையில் வேறு சில நிகழ்வுகளும் நடந்தன. 1950இல் சீனா,திபெத்தைக் கைப்பற்றியது. இன்று திபெத்தை உலக நாடுகள் அனைத்தும் சீனாவின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டுள்ளன.2003இல் சீனத்திற்குச் சென்ற அன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாயியும் அதை ஏற்றுக் கொண்டார்.எனினும்அன்று இந்திய அரசியல் கட்சிகள் பலவும், காங்கிரசிலிருந்த வலதுசாரிகளும் சீனாவிற்கு எதிரான நிலை எடுத்தனர், கடுமையான சீன எதிர்ப்பு அலை இங்கு உருவானது. அடுத்த சில ஆண்டுகளில் தலாய்லாமாவுக்கு இந்தியா தஞ்சம் அளிக்கும் நிலையும் (1959), சீனாவுக்கெதிரான திபெத்திய அரசியல் சக்திகளுக்குப் புகலிடம் அளிக்கும் நிலையும் ஏற்பட்டது. இன்றுவரை சீனாவுக்கு இந்தியா குறித்த மிகப் பெரிய கவலை அளிக்கும் பிரச்சினையாக இது உள்ளது.

சீனாவுக்கு பிலிப்பைன்ஸ், வியட்நாம், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் கடல் எல்லைப் பிரச்சினைகள் உள்ளன. தைவான் தவிர பிற எல்லா நாடுகளுடனும் போர் என்கிற அளவிற்குச் செல்லாமல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே அது முன்னுரிமை அளிக்கிறது. ஆனால் "ஆசியச் சாய்வு" என அமெரிக்கா இப்போது எடுத்துள்ள முடிவு இதற்குத் தடையாக உள்ளது.சீனாவுக்கும் பிறஆசிய நாடுகளுக்கும் இடையே பிரச்சினைகள் தீர்ந்து விடக் கூடாது என்பதில் அமெரிக்கா உறுதியாக உள்ளது.

சிறப்புப் பிரதிநிதிகளின் ஊடாக இன்று இரு நாடுகளுக்கிடையேயும் மேற்கொள்ளப்படுகிற எல்லைப்பேச்சுவார்த்தைகளை அவசரமின்றியும், பொறுமையுடனும் தொடருதல் அவசியம். பிரச்சினைகள் உள்ளதை ஏற்று இரு தரப்பும் செயற்படுதல் ஒரு முன் நிபந்தனை. தேசபக்தக் கூச்சல் போருக்கும், மிகப் பெரிய இழப்புகளுக்குமே வழி வகுக்கும். ●

# 13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டிற்கு அச்சுறுத்தல்

## பொதுசன ஐ.முன்னணி எச்சரிக்கை



13ஆவது அரசியல்யாப்பு திருத்தம் இந்த நாட்டின் பாதுகாப்பு, இருப்பு, ஐக்கியம் என்பவற்றுக்கு பாரிய அச்சுறுத்தல் என பொதுசன ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

13ஆவது சட்டத் திருத்தம், மாகாண சபை இரத்து போன்றவை தொடர்பில் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் ஊடக வியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற போது அதில் உரையாற்றிய பொதுசன ஐக்கிய முன்னணியின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அந்தக் காலத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் யாப்புக்கு மாறாக சட்ட விரோதமாக நிறைவேற்றப் பட்டது. அன்றைய சபாநாயகர் சட்டத்திருத்தத்திற்கு கையொப்பம் இட்ட பின்னரும் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு கோரி நாம் உயர் நீதிமன்றம் சென்றோம்.

ஆனால் உயர் நீதிமன்றம் எமது கோரிக்கையை நிராகரித்தது.

13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் இந்த நாட்டின் இலவசக் கல்வியும் இலவச சுகாதாரத்துறையும் மண்ணரிப்புக்கு உள்ளானது. மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்கும் இடையில் மோதல் நிலை ஒன்று ஏற்படுவதற்கு உள்ள வாய்ப்பை தடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

பொதுசன ஐக்கிய முன்னணி என்ற அடிப்படையில் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எமது பூரண ஆதரவை வழங்குகிறோம்.

மாகாண சபை இருந்தாலும் அது நாட்டின் அபிவிருத்தியில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது.

தற்போதும் கூட அபிவிருத்தி திட்டங்கள் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆளுநர் ஆகியோர் ஊடாக செயற்படுத்தப்படுகிறது.

மாவட்ட அடிப்படையில் நிர்வாகத்தை சீர் செய்வது உள்ளூராட்சிச் சபைகளுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்குவது தொடர்பில் தேரர்கள் அடங்கிய அகில இலங்கை உத்தர சங்க சபா யோசனை முன்வைத்துள்ளது.

எமது கட்சி அந்த யோசனைக்கு ஆதரவு அளிக்கிறது. அதற்கென நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் கட்சி ஆதரவு தெரிவிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 45 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் 45 உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸார் குறித்த நபர்களைக் கைது செய்துள்ளனர்.

இவர்களில் பலருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலருக்கு இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

கடந்த பதினைந்து மாதங்களில் 20 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

# அரசு எமக்கு ஆதரவா? மறுக்கிறது பொதுபலசேனா

அரசாங்கம் தமக்கு ஆதரவு வழங்கவில்லை என்று பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொதுபலசேனா அறிவித்துள்ளது.

அரசாங்கம் தமக்குப் பின்புலமாக இருந்து செயற்படுகிறது என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை பொதுபலசேனாவின் பிரதம அதிகாரி திலந்த விதானகே நிராகரித்துள்ளார்.

இதற்கு உதாரணமாக நாம் ஜனாதிபதியை சந்திப்பதற்கு பல முறை கோரிக்கை விடுத்தும் அது பலனளிக்கவில்லை.

காலம் தாமதித்தே அதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இந்தநிலையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் பொதுபலசேனாவின் தேரர் கேரம விமலகீர்த்திக்கும் இடையில் நீண்டகாலமாக இருந்துவரும் உறவு காரணமாகவே அவர் எமது திட்டங்களுக்கு வருகை தந்ததாக அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் கேரம விமலகீர்த்திக்கும் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் இரத்த உறவு இருப்பதாக வெளியான தகவலை திலக்க விதானகே மறுத்தார்.

# ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேறமாட்டோம்

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் எம்.ரீ. ஹசன் அலி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எங்களை உள்ளடக்காத காரணத்திற்காக ஆளும் கூட்டணியிலிருந்து விலகிக் கொள்ளும் உத்தேசம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதில்லை எனவும், எம்மை கூட்டணியிலிருந்து நீக்குவது தொடர்பில் ஜனாதிபதியே இறுதித் தீர்மானம் எடுக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எமது கட்சிக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என்பதனை ஊடகங்கள் மூலம் அறிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், அரசாங்கத்தின் பின்னால் சென்று பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ளப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளுக்கு இடையில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் அமைச்சர் டியூவுடன் முக்கிய பேச்சு

சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகரவுக்கும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், பத்மநாபா-ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச்செயலர் சிறீதரன் ஆகியோருக்மிடையே நேற்று முன்தினம் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது 13 ஆவது திருத்தச் சட்டமூலத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கைகளைத் தடுப்பது தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இடதுசாரிக் கட்சிகள் மற்றும் 13ஆவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிராக இயங்கக்கூடியவர்கள், மேலும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்று அக்கறைப்படுகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருக்கின்றவர்களைச் சந்தித்து 13ஆவது திருத்தம் தொடர்பாக உரையாடி வருகின்றோம். இதன் ஒரு கட்டமாகவே தங்களையும் சந்தித்து கலந்துரையாட வந்திருக்கின்றோம் என்று புளொட் தலைவர் சித்தார்த்தன் மற்றும் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச்செயலர் சிறிதரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

13ஆவது திருத்தத்தினை மாற்றியமைக்கக் கூடாதென்பதில் அமைச்சர் டியூ குணசேகர தீவிரம் காட்டுகின்றமைக்கு தமிழ் மக்களின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டதுடன், 13ஆவது திருத்தத்தை மாற்றியமைக்கும் நடவடிக்கையினைத் தோற்கடிப்பதற்கான வழிமுறைகள், உபாயங்கள் தொடர்பிலும் அமைச்சருடன் மிகவும் ஆழமாக இருவரும் கலந்துரையாடினர் என்று புளொட் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்தினை மாற்றும் நடவடிக்கைகளுக்கு அமைச்சர் காட்டிவரும் முழுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக முன்னெடுக்க வேண்டுமென்றும் அமைச்சரிடம் அவர்கள் வலியுறுத்தியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் 1987 ஆம் ஆண்டு அன்றைய ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினால் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது ஐக்கிய தேசியக் கட்சியில் இல்லாது கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்துகொண்டு அதற்கு ஆதரவாக அமைச்சர் டியூ குணசேகர வாக்களித்தமையையும் இவ்விருவரும் நினைவு கூர்ந்துள்ளனர் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெரிவுக்குழுவை ஆதரிக்காதோர் துரோகிகள் என்கிறார் கெஹலிய

13ஆவது சட்டத்தை திருத்தும் வகையில் அரசாங்கம் அமைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஆதரவு வழங்காத கட்சிகளை, ஜனநாயக விரோதிகள் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் மேற்கொளளும் நடவடிக்கைக்கு எல்லாக் கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்.

அவ்வாறு ஆதரவளிக்காதவர்கள் ஜனநாயக விரோதிகளாகவே கருதப்படுவர்.



அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதன் முதல் அமர்வு வரும் ஜுலை 9ஆம் நாள் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்க அனைத்துக் கட்சிகளுக்கும் அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான சர்ச்சைகளுக்கு ஜனநாயக முறையில் தீர்வு காண்பதற்கே அரசாங்கம் தெரிவுக்குழுவை நியமித்துள்ளது என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அனைவரும் தெரிவுக்குழுவுக்கு சமுகமளிப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத்தளபதி ஜெனரல் அஷ்பாக் பர்வஸ் கயானி, கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று முன்தினம் மாலை வந்தடைந்தார். அவரை இராணுவத்தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய வரவேற்று அழைத்து வருவதைக் காணலாம்.

# மாகாணசபைத் தேர்தலில் ஜே.வி.பி. போட்டியிடும்

## என்கிறார் ரில்வின்



மாகாணசபை முறைமையை எதிர்த்த போதிலும், தேர்தல்களில் தொடர்ந்தும் போட்டியிடப் போவதாக ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடுவதன் மூலம் மாகாணசபைகளை ஏற்றுக் கொண்டதாக அர்த்தப்படாது. மாகாணசபை முறைமையை இரத்து செய்து தமிழ் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கவேண்டும்.

மாகாணசபை முறைமை இரத்துச் செய்ய யோசனை கொண்டு வரப்பட்டால் முழு அளவில் ஆதரவு வழங்கப்படும்.

மாகாணசபை முறைமையானது இனவாதத்தைத் தூண்டக் கூடிய ஓர் செயற்பாடாகும். தேசிய இனப்பிரச்சினைக்கு மாகாண சபை முறைமையில் எவ்வித தீர்வுகளும் கிடையாது என ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

# கலாசார சீரழிவுகளைத் தடுப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

## யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இளம் சமூகத்தினரின் செயற்பாடுகள் கலாசாரத்தை சீரழிக்கும் வகையில் இடம்பெற்றுவருவது அவதானிக்கப்படுகிறது.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமானது என யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெஃப்றி தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலே அவர் இதனைத் தெரிவித்தார். இன்றைய காலகட்டத்தில் யாழ். மாவட்டத்தில் இளம் சமூகத்தினர் குறிப்பாக மாணவர்கள் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்கள்.

பெற்றோர்களுக்கு தெரியாமல் வகுப்புக்குச் செல்வது எனக கூறி விட்டு நண்பர்களுடன் செலவது, கைத்தொலைபேசிப் பாவனை என்பன மாணவர்கள் மத்தியில் பரவலாக காணப்படுகின்றது. அண்மையில் யாழ். நகரின் பிரபல பாடசாலை மாணவிகள் சிலர் தமது ஆண் நபர் ஒருவருடன் பருத்தித்துறையில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்று தங்கியிருந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிய சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு பெற்றோருக்குத் தெரிவிக்காது சென்று திரும்பிய குறித்த மாணவியர் குறித்து பாடசாலைத் தரப்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதனை அடுத்து அந்த மாணவிகள் மூவரும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதேவேளை இம்மூன்று மாணவிகளும் கையடக்கத் தொலைபேசி வைத்திருந்தமை கூட அநத மாணவியரின் பெற்றோருக்கு தெரிந்திருக்கவில்லை.

பெற்றோர்கள் எவ்வளவு வேலைப்பளுவாக இருந்தாலும் பிள்ளைகள் மீது கவனம் செலுத்துவது மிக அவசியமானதாகும். இளம் சமூகத்தினர் தவறான வழிக்குச் செல்லாது அவாகளை நல்வழிப்படுத்துவதற்கு பெற்றோரும் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனத் தெரிவித்தார். (பா)

## 70 ஆவது ஆண்டு விழா

(குருநகர்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின 70 ஆம் ஆண்டு விழா எதிர வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். ப.நோ. கூட்டுறவுச்சங்க கேடபோர் கூடத்தில் அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் நேபாள அரசின் முன்னாள் பிரதமரும், நேபாளக்கம்யூனிஸ்ட்க்கட்சியின் தலைவருமான தோழர் மாதேவ் குமார் நேபாள் கலந்து சிறப்புரை ஆற்றவுள்ளார்.

கட்சி ஆதரவாளர்கள் அனைவரையும் 70 ஆம் ஆண்டு வருடாந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (68)

# செட்டிப்புல கிராமத்தில் வீதி புனரமைப்பு நடவடிக்கை



(வேலணை)

வேலணை பிரதேசத்தில் மிகவும் பின் தங்கிய செட்டிபுலம் கிராமத்திற்கு மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் செட்டிபுலம் ஜயனார் கோவில் வீதிப்புனரமைப்பும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் 100 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் செட்டிபுலம் முருகன் கோவில் வீதிப்புனரமைப்பும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதைவிட வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்சார இணைப்பு வேலைத் திட்டங்களும் இக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கமைய வேலணை பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி வேலணைப் பிரதேச அமைப்பாளருமான சி.சிவராசாவின் மேற்பார்வையின் கீழ் இவ் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# மலையகத்தைச் சேர்ந்த நான்கு பேர் கைதடி முதியோர் இல்லத்தில் இணைவு

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளில் பல வருடங்களாக வேலைக்கமர்த்தப்பட்டிருந்த மலையகத்தைச் சேர்ந்த சிலர் அவர்களை வேலைக்கு அமர்த்தியிருந்தவர்கள் இறந்து போன நிலையிலும், இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கும் மற்றும் வெளிநாடுகளுக்கு சென்று விட்டதாலும் கவனிப்பதற்கு எவருமற்றதால் வயோதிப நிலையில் கைதடி முதியோர் இல்லத்துக்கு வந்து சேர்ந்திருப்பதாக இல்ல அ,த.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல், மே மாத காலங்களில் இவ்வாறு நான்கு எழுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் வந்து இணைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். கந்தப்பளை, ஹட்டன், நுவரெலியா போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாக இவர்கள் உள்ளார்கள்.

பல ஆண்டு காலமாக இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்ததால் காலப்போக்கில் இவர்களுடைய சொந்தங்களினது தொடர்புகளும் அற்றுப் போயிருந்தன. இவர்களை வீட்டில் வைத்திருந்தவர்களும் கைவிட்டு விட்டதால் இவர்கள் தமது தள்ளாத வயதில் எவரும் கவனிப்பாரற்றுக் கடைசியில் முதியோர் இல்லத்தை நாடி வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# பலாலி வீதி 2 ஆம் ஒழுங்கை புனரமைப்பு எப்போது?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பலாலி வீதி இரண்டாம் ஒழுங்கை நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் காணப்படுவதால் இப்பாதையால் வாகனங்கள் செல்வது மிக சிரமமாகவுள்ளதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் வடிகால்களும் சீரற்றுக் காணப்படுவதினால் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளதுடன் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுவதாக மக்கள் கூறுகின்றனர்.

டெங்கு நோய் ஏற்படும் முன்னர் பாதையையும், வடிகால்களையும் புனரமைப்புச் செய்து தருமாறு உரிய அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (105)

# முரசின் இன்றைய பலன்



29.06.2013.சனிக்கிழமை.

விஜய வருஷம் ஆனி மாதம் 15 ஆம் திகதி. பூரட்டாதி நட்சத்திரம்
மரணயோகம் முன்னிரவு 08.07 வரை. சப்தமி திதி
இராகுகாலம் 08.56 - 10.26 வரை சுபநேரம்
இராகுகாலம் 2.56 - 4.26 வரை.
சுபநேரம் 5.55-7.25 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — மூடிய வியாபார நிலையம் மீண்டும்திறத்தல், பயணம் பற்றிய முடிவு தற்காலிகமாக கைவிடல், கடன்பட்டு சுப காரிய நிகழ்வு, அல்சர்நோய்வாட்டுதல், பிரிந்திருந்த உறவு சேருதல், தனிமை வாட்டுதல் சிநேகிதரால் உதவி மேலதிகாரிகளின் நன்மதிப்பு, தொலைபேசி எண்களை மாறித்தட்டியமையினால் புதிய உறவு சேரல்.

**ரிஷபம்** — இடைத்தங்கல் நாட்டிலிருந்து மீண்டும் தாயகம், இதயநோய் பற்றிக் கவனம், பூப்படைதல் காதலர் வாழ்வில் இனிடை, கர்ப்பச்சிதைவு, வாகனயோகம், பதவி உயர்வுபற்றிய செய்தி, மீள நியமனம் கிடைக்க வாய்ப்பு, குறுக்காக மிருகம் ஓடி சிறுவிபத்து, மின்சார தொடர்பு ஏற்படுத்தல், சுவீப் அதிர்ஷ்டம்.

**மிதுனம்** — வங்கிக்கடன் பற்றிய சுபச்செய்தி, சுபகாரியச்செலவு, இடைத்தங்கல் நாட்டினின்றும் விரும்பிய நாடுசேரல், பிதாவின் தேகசுகம் பற்றிய விசனம்,வாகனயோகம், திருமணப்பேச்சினால் மகிழ்வு, எதிரியின் பயமுறுத்தல், திருடர் பற்றிய கவலை, நரம்புத்தளர்ச்சி தாயாரின் தேகசுகம் முன்னேற்றம், கடன்பட்டதால் மானபங்கம், மக்கள் பற்றிய கவலை.

**கடகம்** — கணக்குகள் பேணப்படாமையினால் குழப்பம், தாயாரின் நோய்பற்றிய கவலை, மங்கள காரியச்செலவு கூடல்,தொழிலில் பற்று வைத்தல், பயணம் தடங்கி விடுதல், மனைகோலத்திட்டம், காலாவதியான பொருட்களைப் பெறுதல், தரகர் புரோக்கரால் அச்சுறுத்தல், பணமின்மையினால் காசோலை திரும்புதல்.

**சிம்மம்** — பிணை வைத்தல், சிதைந்த அடையாள அட்டை புதுப்பிக்க எண்ணம், வேலைக்காக அரசியல் பிரமுகரை நாடுத்ல், மனைமாற்றம், செவ்வாய்க்குற்றத்தினால் திருமணப்பேச்சு முறிதல், பழுதடைந்த பொருட்களை பெற்றுத் துயரம், புதிய கற்கை நெறி ஆரம்பம் போக்குவரத்து விதி மிறி எச்சரித்தல், நோய்தீர ஆயூர் வேத வைத்தியம் நாடுதல், சுவீப் அதிர்ஷ்டம்.

**கன்னி** — திடீர் இடமாற்றம் பற்றிய கவலை, வெளியூர்ப் பயணம் பற்றிய சிந்திப்பு, ஏழரைச்சனியினால் இடப்பக்க உறுப்பு பாதிப்பு, மேலதிகாரியின் ஆதரவு, புதிய கொள்வன விற்கு கடன்படல், மாதாவின் தேகசுகம் அபிவிருத்தி, வங்கித் தொடர்பு மகிழ்ச்சிதரல் கன்னியரின் கையடக்கத் தொலை பேசியினால் உறவுகள் மலர்தல்.

**துலாம்** — பயணம் பற்றிய சுபசெய்தி, நாகதோஷத்தினால் விவாகம் இழுபடல், வாகனயோகமுண்டு பிதாவினால் மூத்த சகோதரத்தினால் உதவியும் ஆதரவும், விஷக்கழ குணமடைதல், தலயாத்திரை செல்ல நடவழக்கை, பாலியல் சேட்டையினால் எச்சரிக்கை, தானதர்ம சிந்தனை, பேராசையினால் பெருநட்டம்.

**விருச்சிகம்** — மனைகோல அபிப்பிராயம், பிரயாணமுகவர் பற்றிய நம்பிக்கையீனம், வயிற்று நோய் வாட்டுதல், கலியாணத் தரகர் காலைவாரிவிடல், தோல், எண்ணெய் சறுக்கலினால் தேக உறுப்பு.பாதிப்பு, கைவிட்டபயணம் மீண்டும் தொடங்கும் உத்தேசம், மூட்டுக்கள் வலியினால் அவஸ்தைப்படல், கருத்தரங்கில் கலந்து கொள்ளல், விற்பனை மனதிற்கு திருப்தியளித்தல்.

**தனுசு** — பாதுகாப்புத் தொடர்பில் அச்சுறுத்தலும் உளரீதியான பாதிப்பும், வேட்புமனுத்தாக்கல் செய்யும் விருப்பு, சிரமதானம், மண்டபம் அமைக்க கடன்பெறல், கடன்காரர் தொல்லையால் தலை மறைவு, வரட்சியினால் பயிர் பாதிப்பு, பெற்றோரின் உடல் நிலையில் அபிவிருத்தி, அரசு தனியார் துறையில் வேலை பெறல் சளிநோய் வருத்துதல், வாகனங்கள் செலுத்திப்பழகதிட்டமிடல், சுவீப்பில் பணம்.

**மகரம்** — பிணக்குகள் தொடர்பான முறைப்பாடு செய்தல், அரசியல் தொடர்பான கருத்துக்களினால் மனஸ்தாபம், திறப்புக்கோர்வைகள் தொலையும் அபாயம். காணி உறுதியின் நம்பகத்தில் சந்தேகம்,வழக்கின் முடிவு சாதகம், ஆயுதத்தினால் காயம், அதிஷ்டலாபச் சீட்டினால் பணம், நோயின் உபாதை நீங்குதல் சட்ட விரோதச் செயலினால் விசாரணைக்குச் செல்லல்.

**கும்பம்** — பதவியால் பாராட்டு,சுவீப்பில் அதிர்ஷ்டம், சம்பளம் ஏற்றம், குழந்தைப்பிரசவம், அயல்நாட்டினின்றும், சுபசெய்தி, தவறிய பொருள் வந்தடைதல், விவாகப் பேச்சு நன்மை தரல், புதியன கொள்வனவு, வீட்டுக்கு வறுமை தரும், விற்பனையாளர் பற்றிய எச்சரிக்கை, வரவு கூழ செலவு குறைதல், புதுமனை கட்டும் ஆவல்.

**மீனம்** — பிதாவின் உதவியினால் வசந்தம். நீதிமன்ற முடிவு கேட்டு மனச்சந்தோஷம், தேங்கிய பொருட்கள் விற்பனை அமோகம், மனைதிருத்த வருபவர்கள் பற்றி அவதானிப்பு, விபத்தினால் அருந்தப்பு, விவாக முயற்சிக்கு அலைச்சல், சகோதரர்விடயத்தில் தலையிடடு கவலை, மார்புச்சளி நோய் கட்டுப்பாட்டில் வருதல், விவாகத்தடை நீக்கம்.

# மாற்றத்தை விரும்பும் மிஸ்பா

(லண்டன்)

மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதில் தவறுகள் ஏதும் இல்லை என பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்ப்புகளுடன் இங்கிலாந்தில் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்குபற்றியிருந்த பாகிஸ்தான் அணி, தான் பங்குபற்றியிருந்த 3 போட்டிகளிலும் தோல்வியடைந்து முதற்சுற்றுடன் அத்தொடரிலிருந்து வெளியேறியிருந்தது.

பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து ஒருநாள் போட்டிகளிலும், இரு ருவென்ரி-20 போட்டிகளிலும் பங்குபற்றவுள்ள நிலையில், அவ்வணியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கைகள் எழுந்துள்ளன.


இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், பாகிஸ்தான் அணியில் மாற்றங்கள் ஏற்படுத்துவதில் தவறுகள் ஏதும் இல்லையெனத் தெரிவித்ததோடு, அணியிலுள்ள எந்தவொரு வீர ரும் அணியில் தனது இடம் நிரந்தரமானது என எண்ணக்கூடாது எனத் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்திலேயே தற்போது தங்கியுள்ள மிஸ்பா உல் ஹக், தான் மிக விரைவில் பாகிஸ்தானுக்குத் திரும்பவுள்ளதாகவும், அதன் பின்னர் மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே சுற்றுலாக்களுக்குரிய அணித்தெரிவு தொடர்பாக தேர்வாளர்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் அணியில் அவசியம் மாற்றம் தேவை. இதற்கான நல்ல வாய்ப்பு இதுதான் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசிம் அக்ரம் கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீரர்களே பொறுப்பு

(சிட்னி)



அவுஸ்ரேலிய கிரிக்கெட் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் நீக்கப்பட்டதற்கு அனைத்து வீரர்களுமே பொறுப்பேற்கவேண்டும். மோசமான ஆட்டம் ஆர்தர் வேலையை பறித்துவிட்டது என்று முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

துடுப்பாட்ட வீரர்கள் பயந்து போய் உள்ளனர். அதிகப்படியான அழுத்தம் அவர்களுக்குக்கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. புதிய பயிற்சியாளர் டரன் லீமன் நிச்சயம் வீரர்களை ஓய்வுநிலைக்குக் கொண்டு செல்வார் என்று நம்புகிறேன். அணி வீரர்களுடன் எனக்கு இப்போது தொடர்பு இல்லையென்றாலும் அவர்கள் நிறைய பயப்படுகிறார்கள் என்பதும் இதனால் அவர்கள் விளையாடும் விதத்தில் விளையாட முடியாமல் போயுள்ளது என்று புரிகிறது.

பிரச்சினை என்று வந்தவுடன் பதற்றமாக மாற்றங்கள் செய்ய வேண்டியதில்லை. உடனுக்குடன் மாற்றங்கள் தேவை. ஆஷஸ் தொடரில் முதல் 2 டெஸ்ட்களுக்குப் பிறகு மாற்றம் தேவைப்பட்டால் உடனடியாக செயற்படுத்துவதே நல்லது.

இந்திய தொடரின் போது மைதானத்திற்கு வெளியே ஏற்பட்ட நிகழ்வுகள், ஒழுங்கின்மைகள், சமீபமாக டேவிட் வோர்னர் விவகாரம் ஆகியவை அணிக்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை. சுருக்கமாகக் கூறவேண்டுமென்றால் அணியின் ஆட்டம் சரியில்லை. இதனால்தான் இந்த விவகாரங்கள் தலை தூக்குகின்றன. வெற்றி பெற்றால் இதுபோன்ற மேம்போக்கான விடயங்கள் பின்னுக்குத் தள்ளப்படும். அணி வீரர்களிடையே பிளவுகள் இருக்கிறதா என்பதை என்னால் இவ்வளவு தூரத்தில் இருந்து கொண்டு கூற முடியவில்லை. ஆனால் பயிற்சியாளர் கொஞ்சம்தான் செய்யமுடியும், எல்லைக்கோட்டைத் தாண்டி உள்ளே போய்விட்டால் வீரர்கள், கப்டன்களின் பொறுப்புத்தான். இந்த விதத்தில் பார்க்கும்போது அவுஸ்ரேலிய அணியின் ஆட்டம் சமீபமாக மோசமானதாக இருந்தது என்றே கூறவேண்டும் எனவும் தெரிவித்தார்.

# பயிற்சிக்கு வேண்டும் அனுமதி

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் முக்கிய ஆடுகளத்தில் பயிற்சி செய்ய அனுமதிக்க வேண்டும் என, ரஷ்யாவின் நட்சத்திர ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா தெரிவித்தார்.

லண்டனில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது. இங்குள்ள முக்கிய ஆடுகளங்களில் விளையாடும் முன்னணி வீரர், வீராங்கனைகள் அடிக்கடி வழுக்கி விழுகின்றனர். இதனால் பலர் காயமடைந்தனர். மூன்றாவது நாளில் மட்டும், பெலாரசின் அசரன்கா, கஜகஸ்தானின் ஷிவ்டோவா, பிரான்சின் டி சோங்கா, குரோஷியாவின் மரின் சிலிக் அமெரிக்காவின் ஜான் இஸ்னர், செக் குடியரசின் ஸ்டெபானக், பெல்ஜியத்தில் ஸ்டீவ் டார்சிஸ் என, ஏழு பேர் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகினர்.

உலகின் மூன்றாம் நிலை வீராங்கனை ஷரபோவா, இரண்டாவது சுற்றுப்போட்டியில், மூன்று முறை ஆடுகளத்தில் வழுக்கி விழுந்தார். போட்டியின் போது ஆடுகளம் குறித்து நடுவரிடம் தனது அதிருப்தியைத் தெரிவித்தார். இதனால், தரவரிசையில் 131ஆவது இடத்திலுள்ள போர்த்துக்கலின் மிச்சலிடம் வீழ்ந்தார்.

இது குறித்து ஷரபோவா கூறுகையில், விம்பிள்டன் தொடர் ஆரம்பமாவதற்கு சில நாட்களுக்கு முன், முக்கிய மைதானங்களில் வீரர், வீராங்கனைகளை பயிற்சி செய்ய அனுமதிக்க வேண்டும். இதன் மூலம், ஆடுகளத்தின் தன்மைய முன்னதாக அறிந்து கொள்ளலாம் என்றார்.




# மூன்றாவது சுற்றுக்குத் தகுதி

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் விளையாட, முதல்நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) தகுதி பெற்றார்.

இரண்டாவது சுற்றில் கரோலின் கார்சியாவுடன் (பிரான்ஸ்) நேற்று முன்தினம் மோதிய செரீனா 6,3, 6,2 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்றார். மற்றொரு 2ஆவது சுற்று ஆட்டத்தில் சேபைன் லிசிக்கி (ஜேர்மனி) 6,3, 6,1 என்ற நேர் செட்களில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவை வீழ்த்தினார். சீன வீராங்கனை லிநா 6,2, 1,6, 6,0 என்ற செட் கணக்கில் ரோமானியாவின் ஹாலெப்பை வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.


# சாத்தியமா?



(லண்டன்)

டெண்டுல்கரின் டெஸ்ட் சாதனையை இங்கிலாந்து அணிக் கப்டன் குக்கால் முறியடிக்க முடியும் என்று இங்கிலாந்து வீரர் கெவின் பீற்றர்சன் ஆருடம் கூறியுள்ளார்.

என்னைப் பொறுத்தவரை இங்கிலாந்து அணியை வழிநடத்த சரியான நபர் குக் தான். எங்களுக்காக தனது பணியை மிகச்சிறப்பாகச் செய்து வருகிறார். தொடர்ச்சியாக ஓட்டங்கள்குவித்து வரும் அவரது ஆட்டம் இன்னும் மென்மேலும் மேம்பட்டுக் கொண்டே இருக்கும். அப்போது டெஸ்ட் அரங்கில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சாதனைகளையும் முறியடிப்பார் குறிப்பாக இங்கிலாந்தின் அனைத்து சாதனைகளையும் தகர்த்து விடுவார். டெஸ்டில் அவர் இதுவரை எடுத்துள்ள ஓட்டங்கள் மற்றும் அவரது வயதை வைத்துப் பார்க்கும் போது, டெண்டுல்கரின் அதிக ஓட்டங்கள் என்ற சாதனையை முறியடிப்பதை இலக்காக கொண்டு அவர் சென்று கொண்டிருக்கிறார். அதை நிகழ்த்த அவருக்கு நல்ல வாய்ப்புள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# முற்றுப்பெறாத ஆட்டம்

(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆரம்ப சுற்றுடனேயே தோல்வியடைந்ததால் எனது எதிர்கால ரென்னிஸ் வாழ்க்கை முற்றுப்பெற்றுவிட்டதாக எவரும் கருதவேண்டும். இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து விளையாடவே விரும்புகின்றேன் என பெடரர் தெரிவித்துள்ளார்.

எந்த ஆட்டத்தில் தோற்றாலும் குறிப்பாக விம்பிள்டனில் தோற்றால் அது மிகவும் ஏமாற்றம் அளிக்கும். இங்கு மறக்க முடியாத பசுமையான நினைவுகள் எனக்கு உண்டு. ஆனால் அன்றைய நாள் கடினமாக போய் விட்டது. ஆரம்ப சுற்றிலேயே தோற்றதால் எனது எதிர்காலம் குறித்து யாரும் பயப்படவேண்டாம். இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து விளையாட திட்டமிட்டுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# இறுதிப் போட்டியில் ஸ்பெயின்

கொன்பெடரேஷன் கோப்பை கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் விளையாட உலகச் சம்பியன் ஸ்பெயின் அணி தகுதி பெற்றுள்ளது.

பரபரப்பான அரையிறுதி ஆட்டத்தில், தண்ட உதை மூலம் 7-6 என்ற கோல்கள் கணக்கில் இத்தாலி அணியை ஸ்பெயின் வீழ்த்தியது.

ஆட்டம் ஆரம்பமாகிய முதலே இரு அணி வீரர்களும் கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். 90 நிமிடங்கள் வரை இரு அணியும் கோல் எதுவும் அடிக்காததால், கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து, தண்ட உதை மூலம் வெற்றி தோல்வியை தீர்மானிக்கப்பட்டது

இரு அணி வீரர்களும் மாறி மாறி தலா 6 கோல்கள் அடித்ததால் ஆட்டத்தில் பரபரப்பு தொற்றியது. 7 ஆவது வாய்ப்பை இத்தாலி வீரர் பொனுசி கோலாக மாற்றத் தவறினார்.

இந்நிலையில் ஸ்பெயின் வீரர் நவாஸ், பந்தை லாவகமாக கோல் வளைக்குள் தள்ளினார். இதனால் 7- 6 என்ற கோல்கள் கணக்கில் ஸ்பெயின் அணி வெற்றி பெற்று, இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

நாளை நடைபெறும் இறுதி ஆட்டத்தில் பலம் வாய்ந்த பிரேசில், ஸ்பெயின் அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன.

# ஏற்க முடியாது

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆரம்ப சுற்றுடனேயே அதிக வீரர்கள் போட்டியிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட வீரர்களுக்காக நாங்கள் பரிதாபப்படுகிறோம். ஆனால், மைதானங்களைக் குற்றஞ்சாட்டுவது ஏற்றுக்கொள்ள முடியாது என விம்பிள்டன் தலைமை நிர்வாக அதிகாரி ரிச்சர்ட் லெவிஸ் தெரிவித்துள்ளார். பல்வேறு காரணங்களால் அவர்கள் வெளியேறினர். ஆனால், மைதானத்தின் தன்மை பற்றி சிலர் குற்றஞ்சாட்டுகிறார்கள்.ஆடுகளம்தான் பிரச்சினை என்று யோசிப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. உண்மையில், ஆடுகளங்கள் நல்ல நிலையில் இருந்ததாக பாராட்டினார்கள். முந்தைய ஆண்டுகளைப் போன்று இந்த ஆண்டும் கவனத்துடன் மைதானங்களைத்தயார்செய்திருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கபடி

# வடமராட்சி கல்வி வலயம் அசத்தல்

(வவுனியா)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கபடிப் போட்டியில் வடமராட்சி கல்வி வலயம் நான்கு இடங்களைப் பிடித்து அசத்தியுள்ளது.

வடமாகாணப்பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கபடிப்போட்டி கடந்த 24,25ஆம் திகதிகளில் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த பாடசாலை அணிகள் பங்கு கொண்டன.

இப்போட்டிகள் 15 மற்றும் 19 வயது ஆண், பெண் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது.

ஆண்கள் பிரிவில் 15 வயதினருக்கிடையிலான இறுதிப் போட்டியில் வடமராட்சி கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணியும், இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அணி 21-17 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்பிரிவில் மூன்றாமிடத்தை வவுனியா பறக்கும் மகாவித்தியாலய அணி பிடித்துக் கொண்டது.

19 வயது ஆண்கள் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் வவுனியா பறக்கும் மகாவித்தியாலய அணியும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உருத்திரபுரம் சிவநகர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதின. இதில் வவுனியா பறக்கும் மகாவித்தியாலய அணி 37-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை இளவாலை சென். ஹென்றியரசர் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

15 வயது பெண்கள் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், கிளிநொச்சி - உருத்திரபுரம் சிவநகர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 14-12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை அணி பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பெண்கள் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணியும், கிளிநொச்சி-உருத்திரபுரம் சிவநகர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதின. இதில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 22-18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி பிடித்துக் கொண்டது. 12 இடங்களுக்கான நடைபெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலை அணி கள் ஆறு இடங்களைப் பிடித்துக் கொண்ட அதேவேளை, வடமராட்சி கல்வி வலயம் நான்கு இடங்களைப் பிடித்து அசத்தியுள் ளது. இதேவேளை, கிளிநொச்சி - உருத்திரபுரம் சிவநகர் தமிழ்க்கலவன் பாடசாலை அணி 15வயதுப் பிரிவு ஆண், பெண் மற்றும் 19 வயதுப் பெண்கள் பிரிவு உட்பட மூன்று பிரிவுகளிலும் இரண்டாமிடத் தைப் பிடித்துக். கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(93,17)



நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்



வவுனியா பறக்கும் மகாவித்தியாலயம்

# பாலகிருஷ்ணன் நினைவு வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

## சென்றலைட்ஸ், ஸ்ரான்லி, ஸ்ரீகாமாட்சி, ஓல்ட்கோல்ட்ஸ் முன்னேற்றம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் பாலகிருஷ்ணன் நினைவு வெற்றிக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் அடுத்த சுற்றுக்கு சென்றலைட்ஸ், ஸ்ரான்லி, ஸ்ரீகாமாட்சி, ஓல்ட்கோல்ட்ஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் பற்றீசியன்ஸ் அணிக்கும் சென்றலைட்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜேம்ஸ் 87, ஸ்ரீபன்ராஜ் 18, செல்ரன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் முகுந்தன் மூன்று, லிவிங்ரன், கிளிங்ரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பற்றீசியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து தோல்வியடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஸ்ரான்லி அணியும், ஸ்ரீகாமாட்சி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய ஸ்ரான்லி அணி 17 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலைச்செல்வன் 30, ரஜனிகாந் 27, கஜதீபன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுதர்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 148 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரீகாமாட்சி அணி 15.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சுதர்சன் 17, றதீசன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரஜீவ், கஜதீபன் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதேவேளை, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதல் போட்டியில் நியூஸ்ரார் அணியும், ஸ்ரீகாமாட்சி அணியும் மோதின. முதலில் ஆடிய ஸ்ரீகாமாட்சி அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அரவிந்தன் ஆட்டமிழக்காமல் 30, சுதர்சன் 29, சுயன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் திலன், அருள், சஜித் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸ்ரார் அணி 18.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 121 ஓட்டங்களைப்பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் மோகன் 53, சஜித் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கார்த்திக் ஐந்து, சுதர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் கிறாஸ் ஹோப்பர்ஸ் அணியும், ஓல்ட்கோல்ட்ஸ் அணியும் மோதின. முதலில் ஆடிய கிறாஸ் ஹோப்பார்ஸ் அணி 12.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஜித் 24, நிரோஜன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் ஜெயசுதன் ஐந்து, நிரோஜ் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 77 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஓல்ட் கோல்ட்ஸ் அணி 14 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஸ்ரீகுகன், நிரோஜ் ஆகியோர் தலா 21 ஓட்டங்க்ளைப்பெற்றனர். பந்து வீச்சில் அஜித் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (42)

விளையாட்டுச் செய்திகள்

# பளுதூக்கும் போட்டியில்

# விதானகே சாதனை

(கொழும்பு)

இரண்டு வருட கால போட்டித் தடைகளின் பின்னர் சிந்தன கீதால் விதானகே பளுதூக்கும் போட்டியில், 85 கிலோ கிராம் பிரிவில் இலங்கைக்கான புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வடமத்திய மாகாண விளையாட்டு விழாவில் ஸ்னெச் முறையில் 128 கிலோகிராம் நிறையை அவர் தூக்கியதன் மூலம் இச்சாதனையை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் ரன்சிலு ஜயதிலக 127 கிலோகிராம் நிறையை தூக்கியதே சாதனையாக இருந்தது.

இரண்டு வருட கால போட்டித் தடைகளின் பின்னர் விதானகே பங்குபற்றிய முதலாவது போட்டியில் அவர் இந்த சாதனையைப் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வேம்படி மகளிர் உ
# 175 ஆவது ஆண்



## பேராசிரியர் - பொ. பாலசுந்

(முன்னாள் துணைவேந்தர் உறுப்பினர்- S.D.S, வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை 1838 ஆம் ஆண்டு ஜுன் 29 ஆம் திகதி நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் இப் பாடசாலையின் கருக்கொள்ளல் 1824 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகியது என்ற கருத்துமுள்ளது. இப்பாடசாலை மெதடிஸ்த சபையின் வரலாற்றில் இங்கிலாந்துக்கு வெளியே ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பெண்கள் பாடசாலை என்ற பெருமை பெற்றுள்ளது. இங்கி லாந்தின் மெதடிஸ்த சபையின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் இப்பாடசாலை யின் ஆரம்பம், பணிப்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பெண் பிள்ளைகளின் கல்வியின் ஆரம்பத்திற்கும் ஏனைய சமய நிறுவனங்களின் கல்விச்செயற்பாட்டில் குறிப்பாக பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் வேம்படி பாடசாலையின் ஆரம்பம் வழிவகுத்தது.

சமயத்திலும் கல்வியிலும் ஆழ்ந்த புலமை கொண்ட பீற்றர் பேர்சிவல் பாதிரி யாரே, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியையும் மற்றும் வேம்படி பெண்கள் பாடசாலை யையும் நிறுவினார். வேம்படி பாட-சாலையின் ஆரம்ப காலத்தோற்றம், வளர்ச்சி பற்றிய விபரங்கள் ஓரளவே கிடைக்கப்பெறு கின்றன.

வேம்படியின் ஆரம்ப கால அதிபர்கள் வரிசையில் செல்வி. ருவிடி (Twiddy 1839-1841), செல்வி கில்னர் (1882-1887), செல்வி மெரிக்கின் (1887-1889), செல்வி எ.பி.ஸ்ரிபன்சன் (A.B.Stephenson 1889-1901), செல்வி.மலிசன் (Mallison 1902-1904) செல்வி ஹோன்பி (Hornby 1908-1913), செல்வி. லைத் (Lythe 1915-1920). செல்வி.கீறிடி (Greedy 1920-1922), செல்வி. பிக்காட் (Pickard 1923-1927), செல்வி.ஸ்கோ கொறவ்ற் (Scowcroft 1928-1946), செல்வி. டோர் (Dore (1933-1935), செல்வி. மேரி பாக்கர் (Barker 1947-1949) ஆகியோர் முக்கிய இடம் பெறுகின்றனர்.

அதிபர் இல்லாத காலங்களில் பாட சாலையை நிர்வகித்தவர்களுள் திருமதி பேர்சிவல், திருமதி ரிம்மர் முக்கியமானவர்களாக உள்ளனர்.

1949 இற்குப் பின் இப் பாடசாலையின் முதல் சுதேசிய அதிபராக செல்வி மேபிள் தம்பை[illegible]வும் (1949-1971) அவரைத் தொடர்ந்து செல்வி.பத்மாசினி ஆறுமுகம் (1971-1981), திருமதி.அரியமலர் இராச ரெத்தினம் (1981-1989), செல்வி.இரா ஜேஸ்வரி இராசரெத்தினம் (1989-1994), திருமதி. பிரின்சஸ் செல்வரூபி ஸ்கந்தராசா (1994-1995), திருமதி.கமலேஸ்வரி பொன்னம் பலம் (1996-2011) ஆகியோரும் அதிபர்களாகக் கடமை புரிந்தார்கள். திருமதி.க.பொன் னம்பலத்திற்குப் பிறகு பதில் அதிபராக சில காலம் திருமதி.இராஜினி.முத்துக்குமாரன் (2011-2012) கடமையாற்றினார். தற்பொழுது 2012-ஜுலை இலிருந்து திருமதி.வேணுகா சண்முகரெத்தினம் அதிபராகக் கடமை புரிகின்றார்.

1944 இல் அன்றைய கல்வி அமைச்சர் திரு.C.W.W கன்னங்கரா இலவசக்கல் வியை அறிமுகம் செய்ததால், தேசிய ரீதியில் ஏற்பட்ட உத்வேகம், வளர்ச்சி மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய முறையில் வேம்படி தன் பங்களிப்பைச் செய்தது. அரசின் உதவி பெறும் பாடசாலையாக மாறியது. வேம்படி 1938 இல் மூன்றாம் ஆம் தரப் பாடசாலையாக இருந்து 1947 இல் இரண்டாம் ஆம் தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது. SSC வகுப்புக்களில் விஞ்ஞானப்பிரிவு அறிமுகப்படுத் தப்பட்டது. இக் காலத்தில் பாடசாலையின் அதிபராக செல்வி பாக்கர் இருந்துள்ளார். 1952 ஆம் ஆண்டு முதலாம் தரப் பாடசாலையாக மேலும் தரமுயர்த்தப்பட்டது.

1948 இல் நாடு சுதந்திரம் அடைய கடைசி ஆங்கில அதிபரான செல்வி பாக்கரின் பணிக்காலம்

### MESSAGE OF FELICITATION FROM HON. GOVERNOR, NORTHERN PROVINCE TO BE PRINTED IN 175TH ANNIVERSARY MAGAZINE OF VEMBADI GIRLS' HIGH SCHOOL, JAFFNA



I am extremely happy to send a message felicitating the Vembadi Girls' High School on its 175th Anniversary.

The, Vembadi Girls' High School could be termed the pioneer School for Women's Education and Women's Development. This school has the prestige of being one of the oldest Girls' Schools in Jaffna, in addition to it being a leading Girls' School in the Northern Province.

Mention has to be made that the Vembadi Girls' High School has always been in the forefront where education is concerned, producing good results in the G.C.E. O/L examinations as well as the G.C.E. A/L examinations.

My congratulations to the Principal, Staff, Students, Parents and well-wishers of this School for their hard work and contribution to the Society and the Nation.

**GA Chandrasiri**
**Governor - Northern Province**



It is great pleasure that I extend my warm felicitation on the 175th anniversary of Vembadi Girls' High School, Jaffna, established with the noble concept of educating the girls of the Northern Province in 1838.

Throughout the history, the school has achieved the expectations of its founders. Vembadi Girls' High School has become the leading school in Jaffna with a student population of 2150 and 99 teachers. The school ensured a very high rate of results at public examinations paving the way for students to enter into the modern world, preserving discipline and manners expected of girls by the community. The school has excelled in extra-curricular activities as well.

I take this opportunity to extend my heartiest wishes to the Principal, teachers and students in all their future endeavours.'

**S.M.Gotabaya Jeyarathne**
**Secretary,**
**Ministry of Education**




யாழ்ப்பாண தீபகற்பத்திலே பெண்பிள்ளைகளின் கல்விக்கென தனித்துவம்மிக்க பாடசாலையான யா/வேம்படி மகளிர் கல்லூ ரி தனது கல்விச்சேவையை வழங்கி 175ஆவது ஆண்டில் தடம் பதிப்பதையிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"செய்வதை துணிந்து செய்" என்ற மகுட வாசகத்தை தன்னகத்தே புனைந்து நிற்கும் இக்கல்லூரியானது தன்னை நாடி வரும் பெண்களிற்கு அளப்பரிய கல்விச் செல்வத்தை வழங்கி பரீட்சைப்பெறுபேறுகளில் தனக்கென ஓர் உயர்வான இலக்கினை எட்டி சாதனை படைக்கும் கல்விக்கூடமாக திகழ்கின்றது. இலங்கையில் பல கல்விமான்களையும் முகாமையாளர்களையும் எந்திரிகளையும் வைத்தியர்களையும் மற்றும் பல்துறை சார்ந்த விற்பன்னர்களையும் ஆக்கிக் கொண்டிருக்கின்றது என்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

175ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளிவரவுள்ள மலர் அழகாய் மலர்ந்து நறுமணம் பரப்ப எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்,**
**செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடமாகாணம்.**



### Message of the Provincial Director of Education

It is a matter of joy that the Vembadi Girls' High School has in an unassuming and unostentatious way completed about two centuries of dedicated service and publishes a souvenir marking its celebration. When I was thinking how it was and how it will be, I could observe the remarkable service it rendered to the nation and particularly to Jaffna. Being one of the oldest Methodist mission schools it has lofty ideas and sound principles in bringing up the children. After fulfilling various needs and preparatory activities to establish the school in the 19th century, it grew rapidly in the first half of the 20th century. Because of government policy Vembadi Girls' High School too was absorbed as one of the state schools. But it never failed to carry on its traditions. It preserves its dignity as one of the leading National schools of Sri Lanka. It has been showing its colours in core curricular activities and co-curricular activities.

I take this opportunity to send my cordial greetings to Vembadi Girls' High School on the occasion of its jubilee celebration.

**V.Selvarajah**
**Provincial Director of Education,**
**Northern Province.**



கல்விசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி இன்று தனது 175ஆவது ஆண்டை அடைந்திருப்பதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாணத்து கல்விப் பாரம்பரியத்தை நீண்ட காலமாக வளர்த்தெடுத்த பெருமை இக்கல்லூரியைச் சாரும். எல்லோருக்கும் கல்லூரி என்னும் வாசகத்திற்கு அமைய மகளிர்களுக்கென ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி மூலிகைகளில் வேம்பு மரத்தை கல்லூரியின் நாம-மாகக் கொண்டு 175 ஆண்டுகள் இந்நாட்டில் பல்துறை சார்ந்த மாண-விகளை உருவாக்கிய பெருமைக்குரியது. இக் கல்லூரியின் மகளிர் உயர்நிலை கொள் வதற்கு இன்றைய அதிபர், ஆசிரிய பெருமக்கள் செயற்படுவது பாராட்டுக்குரியதாகும். இக் கல்லூரி பல வளர்ச்சிகளைக் கண்டு பல்லாண்டு காலம் வளம் பெற வாழ்த்துகின்றோம்.

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**




யாழ் குடாநாட்டின் முதல் நிலை வகிக்கும் கல்லூரியாக விளங்குவது வேம்படி மகளிர் கல்லூரி. கடந்த நூற்று எழுபத்தைந்து ஆண்டு காலமாக தமிழர் கல்வி வரலாற்றில் மகத்தான சாதனை படைத்து நிமிர்ந்து நிற்கின்றது. வேம்படி மகளிர் கல்லூரி அமைந்துள்ள இடத்தில் நாவலர் பெருமான் தனது ஆங்கிலக் கல்வி யைக் கற்றதாக சரித்திரம் கூறுகின்றது. பெரியவர்களின் பாதம் பணிந்த இப் பாடசாலையின் வளர்ச்சி என்பது வியக்கத்தக்கது. வேம்படி வளாகத்தில் கற்கும் வாய்ப்பு பெற்ற மாணவிகள் பாக்கியசாலிகள். அவர்கள் நிறைந்த வெற்றிகளைச் சந்திக்க பிரார்த்தித்து ஆசி கூறி அமைகிறேன்.

**கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை இலங்கை.**
**உபதலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்.**



யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை 175ஆவது ஆண்டு நிறைவையிட்டு அகமகிழ்கிறேன். இக் காலகட்டத்தின் அபிவிருத்திச் சங்க செயலாளர் என்ற வகையில் நானஇிஇக் கல்லூரியில் பணியாற்றிய பணியாற்றுகின்ற அதிபர் ஆசிரி யரகள் கல்வி கற்ற கற்றகின்றமாணவார் ஆகியோரை பாரட் டுகின்றேன் இன்னும் இக்கல்லுரி வளங்கள் பல பெற்று இலங்க இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். குகதாஸ்**
**பாடசாலை அபிவிருத்தி**
**சங்க செயலளார்**



யாழ் நகரில் கல்வி ஒ[illegible]
பாடசாலைகளில் ஒன்ற[illegible]
மகளிர் கல்லூரி தன[illegible]
பண்புகளையும், சிறப்[illegible]
மை வ[illegible]று கண்ட [illegible]
கால [illegible]பரிய கல[illegible]
விகளையும், கல்விமா[illegible]
நாட்டிற்களித்த பெருமை[illegible]
இவ்வாறு சீரும் தி[illegible]
மண்ணில் தலைநிமிர்ந்து நிற்கும் யா. வேம்[illegible]
மேலும் தனது இலக்குகளையடைந்து, [illegible]
பணியால் சிறந்த சமுதாய உருவாக்கத்[illegible]
காட்டும் கலைக்கூடமாகத் தொடர்ந்தும் வ[illegible]
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கி[illegible]

**அரசாங்க அதிபர்/மாவட்ட[illegible]**



I feel very happy and privil[illegible]
on the eve of the 175th ann[illegible]
Vembadi Girls' High School[illegible]
This premier national schoo[illegible]
was founded in 1837 with [illegible]
providing access to educatio[illegible]
society.

It is my hope and prayer that J/Vembadi Gir[illegible]
strength to strength in serving the cause o[illegible]
Lanka.

**Zonal Dire[illegible]**



**Message from Mrs. S. Anandak[illegible]**
**Vembadi Girls' High School**

It is with great pride and pleasure t[illegible]
itation to my Alma Mater on her [illegible]
of the OGA, Jaffna. Our dear old [illegible]
her stanch service for 175 years a[illegible]
will continue for years to come. I [illegible]


அனுசரணையாளர்கள்...

**திருமுருகன் கொம் நெற்**
உள்நாடு,
வெளிநாடுகளுக்கான
துரித தபால்கள் சேவை.
259, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

**ஆசீர்**
வணிக நிலையம்
தொ.பெ: 021 222 5485
202A கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**புத்தகக் கூடம்**
*Book Lab*
தொ.பெ: 021 222 2990
077 128 5749
இல. 20, 22 சேர்பொன்
இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

***அன்னை***
புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**பூபாலசிங்கம்**
புத்தகசாலை
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீலங்க[illegible]**
புத்தகசா[illegible]
234, கே.கே.எஸ்[illegible]
வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212222[illegible]

# உயர்தர பாடசாலை
# ண்டு சிறப்பு மலர்




## சுந்தரம்பிள்ளை - PHD(Durham)

பாடசாலை.)

முடிவடைய முதல் சுதேசிய அதிபராக செல்வி மேபிள் தம்பையா பதவி ஏற்று பாடசாலையில் தேசிய மாற்றங்களுக்கு ஏற்ப நிர்வாகத்தை முன்னெடுத்தார். 100 ஆண்டுகளுக்கு மேலாக ஆங்கில மொழி மூலம் போதனையைக் கொண்டிருந்த வேம்படி 1953 இல் அன்றைய அரசாங்கத்தின் கல்விக் கொள்கைப்படி ஆறாம் வகுப்பில் தமிழில் போதனை ஆரம் பித்து 1957 இல் க.பொ.த சா/த இல் முழுமைபெற்றது. 1959 இல் பல்கலைக்கழக அனுமதி வரை தமிழில் போதனை இடம்பெற்றது. 1960பது களின் பிற்பகுதியில் விஞ்ஞான பிரிவிலும் தமிழில் போதனை முழுமை பெறலாயிற்று.

1961 இல் அரசாங்கம், தனியார் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற பொழுது இப் பாடசாலை அரச பாடசாலையாக மாறிய பொழுதும் செல்வி தம்பையா அவர்கள் இம் மாற்றத்தை சாதகமாக மாற்றி பாடசாலையின் கல்வியையும், பௌதீகவளத்தையும் விருத்தி செய்தார்.

செல்வி தம்பையாவைத் தொடர்ந்து செல்வி ஆறுமுகம் அதிபராகப் பொறுப்பேற்றார்.

செல்வி ஆறுமுகத்தை தொடர்ந்து திருமதி. அ. இராசரத்தினம் அதிபர் பொறுப்பை ஏற்றார். இவரது காலத்தில் 1984 இல் வேம்படி தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. நாட்டு நிலைமைகள் சீர்குலைந்து சென்ற நிலையிலும் அதிபர் மூன்று மாடிக்கட்டடத்தைப் பெற்றுத்தந்தார். இவர் பாடசாலையில் 150 வது ஆண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாடினார். மேலும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியுடன் இணைந்து 6 ஆம் ஆண்டு அனுமதி பரீட்சை நடத்தி மாணவிகளைத் தெரிவு செய்தார். இவரது காலத்தில் வேம்படி 6 ஆம் ஆண்டு அனுமதி மேலும் மேலும் முக்கியம் பெறலாயிற்று.

திருமதி.அ.இராசரத்தினத்தைத் தொடர்ந்து வந்த செல்வி இ.இராசரத்தினத்தின் துணிச்சலான, அர்ப்பணிப்பான சேவையால் பாடசாலையின் செயற்பாடுகள் தக்க வைக்கப்பட்டன. யாழ்ப்பாணக் கோட்டையில் இடம்பெற்ற தொடர்ச்சியான யுத்தத்தால் 1980களின் பிற்பகுதியிலும் 1990ஆம் ஆண்டிலும் பாடசாலை பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியது. மாணவிகள் வேம்படியை விட்டு வேறு பாடசாலைகளுக்கு இடம்பெயரலாயினர். இந்நிலையிலும் கூட பாடசாலையின் 150 ஆவது ஆண்டு நிறைவு நினைவுமலரை அதிபர் சிறப்பாக வெளியிட்டார்.

செல்வி இராசரத்தினத்தைத் தொடர்ந்து திருமதி ஸ்கந்தராசா அதிபர் பதவியைச் பொறுப்பேற்றார். 1995 ஒக்டோபர் 30ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து மக்கள் ஒட்டு மொத்தமாகத் தென்மராட்சிக்கும் பிற பகுதிகளுக்கும் இடம்பெயரலாயினர். வேம்படிப் பாடசாலையும் சாவகச்சேரிக்கு ஒரு சில முக்கிய ஆவணங்களுடன் இடம் பெயர்ந்தது. 1995 நவம்பரிலிருந்து 1996 ஏப்பிரல் வரை இப்பாடசாலை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கியது.

1996ஆம் ஆண்டு ஏப்பிரலில் யாழ்ப்பாணத்தில் மக்கள் மீள் குடியேற்றத்துடன் இப் பாடசாலையும் தன்னிடத்துக்கு வந்தது. பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் இயங்கத்தொடங்கியது. அழிவில் இருந்து ஆக்கம் என்ற நிலையில் குறுகிய காலத்தில் பாடசாலை புதுப்பொலிவு பெற்றது.

திருமதி வேணுகா சண்முகரத்தினம் 2012ஆம் ஆண்டு பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்று நீண்ட பாரம்பரியம் கொண்ட இப்பாடசாலையை சிறப்பாக நடத்தி வருகின்றார். இவர் தலைமையில் 175 வருடக் கொண்டாட்டம் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

---

கல்வி ஒளிபரப்பிவரும் பிரபல ...ளில் ஒன்றாக விளங்கும் வேம்படி ...ல்லூரி தனக்கெனத் தனித்துவமான ...யும், சிறப்புக்களையும் கொண்டுள்ள ... கண்ட ...மையாகும். தனது நீண்ட ...பரிய க...ப்பணியில் பல புத்திஜீ..., கல்விமான்களையும் உருவாக்கி ...த்த பெருமை இக் கல்லூரிக்குண்டு. ... சீரும் திருவும் பொலிந்து யாழ் ...ம் யா.வேம்படி மகளிர் கல்லூரி மென் ...யடைந்து, தனது தரமான கல்விப் ...ருவாக்கத்திற்குச் சீரிய வழியினைக் ...டர்ந்தும் விளங்க எனது மனமுவந்த ...துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்**
**...திபர்/மாவட்டச் செயலர், யாழ் மாவட்டம்.**

---

...y and privileged to send this message ...e 175th anniversary celebrations of J/ ...High School.

...tional school in the Northern Province ... 1837 with the primary objective of ... to education to the girls in the Jaffna

...Vembadi Girls' High School goes from ... the cause of female education in Sri

**Mr.S.Uthayakumar**
**Zonal Director of Education, Jaffna**

---

**...S. Anandakumarasamy, President OGA, ...School**

...nd pleasure that I send this message of felic... ...later on her 175th birth day as the President ...Our dear old lady has successfully completed ... 175 years and I am sure that her services ...s to come. I wish her all success in future.

**Mrs S. Anandakumarasamy**
**President, OGA, Jaffna.**

---



**Message by President of Methodist Church**

I have great pleasure in sending this message of felicitations to the souvenir which is being published by the Vembadi Girls High School, Jaffna. The Methodist Church Sri Lanka is proud to be associated with the 175th anniversary celebration of the school which was founded by Rev. Peter Percival, whose commitment to the poor and downtrodden in society enabled the church to meet this challenge to uplift the community in and round the area.

As we celebrate with the present principal, staff, children and the educational officials associated with the school, we wish them well and pray God's Blessings on all who toil to improve the school. We look forward for greater association with this beautiful school.

**Rev. Dr. A. W. Jebanesan**
**President, Methodist Church, Sri Lanka**

---




யாழ் மாவட்டத்தின் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டு உழைக்கும் பாடசாலைகளில் தனக்கென உரித்தான இடத்தைப் பெற்று நிற்கின்ற பாடசாலைகளில் முன்னிலை வகிக்கும் பாடசாலை என்ற பெருமை யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையே பெறுகின்றது.

தனது கல்விப்பணியில் 100% அடைவைப் பெற்று எமது மாவட்டப் பெருமையையும் நிலைநாட்டும் பாடசாலை மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டு நல் மாணவர்களை உருவாக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சு.சண்முககுமார்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணக் கல்விக் கோட்டம்**

---



**Felicitation Message-175th Anniversary**

May God bless Vembadi Girls' High School with many more years of service to the girls of Jaffna.May the Principal and Staff be guided by the Almighty in their service and make Vembadi reach still greater standards. Let them remember that "Service to man is service to God".

In years to come when the girls become older, may they be outstanding citizens of the country particularly Jaffna.

**Miss.P.Arumugam**
**Former Principal**

---



எமது அன்னையாம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை இன்று தனது 175 ஆவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடி மகிழ்வதற்கு கிடைத்த அளப்பரிய சந்தர்ப்பத்திற்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து நன்றி செலுத்துகின்றேன்.

1838 இல் பாதிரியார் பீற்றர் பேர்சிவல் அவர்களால் தீர்க்கதரிசனத்துடன் பெண்களுக்கென ஒரு தனியான சிறந்த கல்வி வழங்கவும்,சமூகத்தில் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கவும், நாட்டின் எதிர்காலம் சுபீட்சம் பெறவும் என,நிறுவப்பட்ட உயர்தர பாடசாலைஆகும். இப் பாடசாலை நிறுவுனரின் கனவுகளை நிறைவேற்றி மாணவர்களின் தனித்துவம் பாரம்பரியங்களைப் பேணி வளர்த்து பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கி யாழ் பிரதேசத்தில் மட்டுமன்றி அகிலமெங்கும் புகழ்பரப்பி தனது சேவையாற்றி வருகின்றது.

இந்நாளில் இறைவனை வேண்டிப் பிரார்த்திப்பதில் கல்லூரியின் புதல்வியாக நின்று மட்டில்லாத மகிழ்ச்சியுடனும் நன்றிப் பெருக்குடனும் மன்னு புகழ் பரவி நடுழி வாழி வாழி என சிரம் தாழ்த்தி வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி.வேணுகா சண்முகரத்தினம்**
**அதிபர்.**

---



**விழாக்குழுத் தலைவரின் உள்ளத்திலிருந்து...**

யாழ். மண்ணில் நனி சிறந்து முதன்மை பெற்று விளங்கும் கல்விக் கூடங்களின் சிகரமாய் விளங்கும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரித்தாய் இன்று தன் 175ஆம் அகவையில் பொலிவுற்றுத் திகழ்கின்றாள். எமது மண்ணின் கல்விக் கட்டுமானத்தில் அரும்பெரும் பணியாற்றியவர்கள் மற்றும் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் பலர் எம் கல்லூரியின் வாரிசுகள் என்றால் அது மிகையாகாது.

எமது கல்விச் சாலையானது என்றும் புகழ்பெற்று மணம்பரப்ப வேண்டுமென்றும் அதன் பெருமைசேர் வாரிசுகள் நாமென்று மார்தட்டிக் கொள்ள எல்லாம்வல்ல ,றைவன் அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி. (திருமதி.) சிவமதி சிவச்சந்திரன்**
**175 வது விழாக்குழுத் தலைவர்**

---



**வேம்படி ஓர் தனித்துவம் வாய்ந்த கல்லூரி**

வேம்படி மகளிர் கல்லூரியின் 175ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கண்டு அகம் மகிழ்ந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.இந்த நீண்டகால வளர்ச்சியானது குடாநாட்டு மக்களின் கல்வி அறிவுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளதை நாம் அறிவோம். இக்கல்லூரி மேலும் பல நூற்றாண்டுகள் மிளிர்ந்து சீரும் சிறப்பும் பெற்று வாழ எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செல்வி. இ. இராஜரட்ணம்**
**முன்னாள் அதிபர்.**

---



**ஆசிச்செய்தி**

யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தனது 175ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். 1838ம் ஆண்டு பெண்கல்விக்கு எதிர்ப்பு ,ருந்த சூழலில் வண. பேர்சிவல் அடிகளாரால் ஐந்து மாணவிகளுடன் ஆரம்பிக்கப்பட்ட ,ப்பாடசாலை ,ன்று அர்ப்பணிப்பான அதிபர்கள், ஆசிரியர்கள,பெற்றோர்கள் பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள் எனப் பல தரப்பட்ட ஆளணியினரின் அயராத உழைப்பினால் 2000இற்கு மேற்பட்ட மாணவர்களுடன் ஆலவிருட்சம் போல வளர்ந்தள்ளது. பாடசாலை அதிபர் தலைமையில் ,டம்பெறும் 175ஆவது ஆண்டு நிறைவுவிழா நிகழ்வுகள் சிறப்புற நடந்தேறவும் எல்லாம் வல்ல ,றையாசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி.க.பொன்னம்பலம்**
**முன்னாள் அதிபர்.**

---



175வது அகவையை நிறைவு செய்யும் எம் வேம்படி அன்னையை' வாழ்த்துவது எமக்கு கிடைத்த பாக்கியம். யாழ் மகளிரின் கல்விப்பயணம் நூற்றாண்டைக் கடந்த சாதனையாய்த்தொடர்கிறது. உன்னதமான இக் கல்லூரியில் கல்வி கற்க கிடைத்த சந்தர்ப்பத்தினை எண்ணி தினம் தினம் மகிழ்கின்றோம்.

**செல்வி சாரங்கா சபாநாயகம்**
**சிரேஷ்ட மாணவத்தலைவி**
**யா வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை**

---



வேம்படி மகளிர் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் நினைவேட்டிலே, யாழ்ப்பாணம் முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வாழ்த்துச்செய்தியொன்றினை முன்வைப்பதில்

வேம்படி மகளிர் கல்லூரியினை ஸ்தாபித்தவர்கள், அதன் வெற்றிக்காக உழைத்தவர்கள், இன்றுவரை அதனை முன்னேற்றகரமாக கல்வி நிறுவனமாக வழிநடாத்திக்கொண்டிருக்கின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளும், வழிகாட்டலும் என்றும் கிடைக்கவேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்-ஷெய்க் அஸ்மின் அய்யூப் (நளீமி)**
**,ஸ்லாமிய அபிவிருத்தி வங்கி - ஜித்தா**
**இலங்கைக்கான மாணவர் நலன்சார் பிரதிநிதி.**

...ங்கா
...சாலை
...கே.எஸ். ...தி, ...பாணம். ...0212222573

E-CITY
College of English & IT
இல. 372 D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0774924166 0770610271

ABANS
160, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
T.P 020240440 0777684068

DMI
113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
Tel : 0212224403
M.M.V. வீதி நெல்லியடி
Tel : 0213207700

St. Antony's.com
187, k.k.s. Road Jaffna.
Hotline - 0212224865

Sikaram.lk MEDIA

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

ஐயோ அம்மா
அடிக்கிறா!...
அன்பினைப் பதுக்கிவிட்டு
துடிக்கிறேன் நான்
துலையுதில்லை தரம் ஐந்து

# ஐயோ அம்மா அடிக்கிறா!

போலிக் கௌரவங்கள் போர்த்த சமூகமாக எமது தமிழ் சமூகம் மாறி வருகின்றது. நிதானத்துடன் நிதர்சனங்களை சிந்திக்காத மனப்பாங்குகள் முளைவிட ஆரம்பித்து விட்டன. பின் விளைவுகள் தெரியாது, முன் நடக்க ஆரம்பித்து விட்டது. இதன் பிரதிபலிப்புக்கள் எமது சந்ததியை சாகடிக்கப் போகின்றது. மாற்றம் வேணடி நிற்கும் மக்கள் முரசு பல பிரச்சினைகளை வாரம் தோறும் கொண்டு வருகின்றது. சித்தித்துச் செயற்படுங்கள் இழப்புக்களை தொடர்ந்து நாம் சுமக்க முடியாது.

பாடசாலைக்கல்வியை முடித்தவர்களில் 5 வீதமானோர் மாத்திரமே பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றார்களாம். மிகுதி 95 வீதமானோரின் நிலை என்ன?... ஏன் இந்த நிலை?... இதற்கென்ன அடிப்படை?... உயர்கல்விகளில் ஏன்... இநத வீழச்சி? கல்வி நிலை வெறுப்பா?... கலைத்திட்ட முரண்பாடா? கல்வியமைப்பில் சிக்கல்களா?... இத்துருவத்தில் நகரும் ஆய்வுகள் பல்வேறு முன்வைப்புக்களை நிரூபிக்கின்றன. அதில் ஒன்றுதான் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கான திணிப்பு.

**கொஞ்சித் திரியும் பிஞ்சுப் பருவத்தில் நெஞ்சம் வெடிக்கின்றது.**

"எனது பிள்ளை எல்லோரையும் போல் வெற்றிபெறவேண்டும், உற்றார், உறவினர்கள் மத்தியில் தலைநிமிர்ந்து நான் வாழவேண்டும். சமூக அந்தஸ்தை எனது பிள்ளை பெறவேண்டும் என்று ஆசைப்படுவதில் தப்பில்லை. மனித பந்தங்களுக்குள் கட்டுப்பட்ட ஆசைகள் இவை. ஆனால் அதேயாசை உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கே உலையாகின்றதென்றால் உங்களால் தாங்க முடியுமா?... அர்த்தமற்ற வரம்பு மீறிய வெற்றிக்காக உங்கள் பிள்ளைகள் வாழ்வைத் தொலைத்து நிற்பதை ஏற்றுக் கொள்வீர்களா?...

**தட்டிவிட்டால் உடைந்த விடும் முட்டைக் கருக்கள் இவர்கள் தட்டவும் கூடாது எட்ட நிற்கவும் கூடாது. தாய்மைக்கே இலக்கணம் வகுத்து தாலாட்ட வேண்டும்.**

உளவியல் பின்னடைவு என்பது எதிர்காலத்தை ஏக்கத்திற்குரியதாக மாற்றும் ஓர் விபரீதவிளைவு. இதற்கு அப்பால் நிற்பது தான் கல்வி என்பதை ஒவ்வொரு பெற்றோரும் புரிநது கொள்ள வேண்டும். எமது நாட்டில் நாம் உள ஆரோக்கிய தொழிற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் பிற நாடுகளில் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுககின்றார்கள். இதனால் தான் நாம் அபிவிருத்தியடைந்து வரும் கட்டத்தல் இருந்து அபிவிருத்தியடையாத கட்டத்திற்கு பின்னோக்கிச் செல்கின்றோம்.

**தரத்தை நிர்ணயிப்பது எது?**

ஆரம்ப கற்கையில் பூரண தேர்ச்சி என்பதையும், இடை நிலைக்கு இந்த மாணவன் செல்ல தகுதியுடையவன் என்பதையும் தீர்மானிக்க கல்வயமைச்சு 75 எனும் வெட்டுப் புள்ளியை வைத்துள்ளது. இதற்கு மேல் பெற்றால் போதும் என்பதை சுட்டவே ஓர் சான்றிதழும் கல்வியமைச்சு வழங்குகின்றது. இதற்கப்பால் புலமையுள்ளவன் திணிப்புக்களிற்கு அப்பால் சித்திபெறுவதற்காகவே புலமைப்பரிசில் வெட்டுப் புள்ளியாகும். திணிப்பின் மத்தியில் வருவது புலமையில்லை என்பதை பெற்றோர்கள் தெளிவாகப்புரிந்து கொள்ளவேண்டும். தீர்வு தயவு செய்து அழுத்தங்களையும் திணிப்புக்களையும் பிள்ளைகள் மீது கொடுககாதீர்கள். கற்றலில் வெறுப்புநிலை உண்டாகுமளவிற்கு பெற்றோரின் திணிப்புகள் உள்ளது. இது விபரீத விளைவுகளை உங்களிற்குத் தெரியாமலே ஏற்படுத்திவிடும் சுயகற்றல் என்பது தான் இடைநிலை உயர் நிலைக்கு தேவையான ஒன்று இது இத்திணிப்புக்களால் நிராகரிக்கப்படலாம் வாழ்வியலைத்தீர்மானிப்பது உயர்கல்விகளே. போலி கௌரவங்களிற்காக வாழ்வினையே போட்டுடைக்கும் நிலைக்கு ஆக்கிவிடாதீர்கள். ஆரம்பப்பிரிவு சித்தி என்பதை நிர்ணயிக்கும் 75 வீத புள்ளிகளைப் பெற்றால் போதும் என்பதைப்புரிந்து கொள்ளுங்கள் தற்போது உலக வாழ்வியல்முறை திசைமாறுகின்றது. புத்தகக்கல்வி என்பதற்கப்பால் இதற்கேற்ப பிள்ளைகளைப் பல துறைகளில் வளர்ப்பதுதான் இன்றைய தேவைகளில் ஒன்று

- வெண்கட்டியன்



## புதிர்ப்போட்டி 49

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

**புதிர்ப்போட்டி 49 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 10.07.2013**

**1)** சனக்கூட்டமொன்றில் 2/9 பங்கினர் 8 பேர் ஆயின் அக்கூட்டத்தில் இருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை என்ன?

..........................................

**2)** ஒரு மாணவர் 4 பாடங்களில் பெற்ற புள்ளிகள் முறையே 80, 70, 60, 50 ஆயின் அவனது சராசரிப்புள்ளி என்ன?

..........................................

**3)** வாடகை மோட்டார் கார் முதலாவது கிலோ மீற்றருக்கு ரூபா 7 ஐயும் அதன் பின்னர் ஒவ்வொரு கிலோமீற்றருக்கும் ரூபா 5 வீதமும் அறவிடும் வாடகை மோட்டார் காரில் 10 km செல்வதற்கு அறவிடப்படும் பணம் எவ்வளவு?

..........................................

**4)** நான்கு நண்பர்கள் சேர்ந்து மலை ஏற ஆரம்பித்தார்கள் 4 பேரும் மலை உச்சியை அடைந்த போது 5 நாட்கள் எடுத்தன ஆகவே ஒருவருக்கு மலை ஏற எத்தனை நாட்கள் எடுத்தன?

..........................................

**5)** கம்பி வேலி ஒன்றின் இரு தூண்களுக்கு இடையில் உள்ள தூரம் 4 மீற்றர் ஆகுமாறு 8 தூண்கள் நடப்பட்டுள்ளன முதலாவது தூணிலிருந்து கடைசித் தூண் வரையுள்ள தூரம் எவ்வளவு?

..........................................

**6)** முக்கோணத்தை உருவாக்க மூன்று சட்டங்கள் தேவை. ஒரு சதுரத்தை உருவாக்க 4 சட்டங்கள் தேவை. இரண்டு முக்கோணங்களை உருவாக்க ஆகக் குறைந்தது எத்தனை சட்டங்கள் தேவை?

..........................................


**7)** ஓர் இடையன் ஆடுகளையும், கோழிகளையும் உணவுக்காக வெளியே எடுத்துச் சென்றான் அவன் எடுத்துச் சென்ற பிராணிகளின் மொத்தக் கால்களின் எண்ணிக்கை 24 ஆகும். இவற்றில் கோழிக்குரிய கால்கள் எட்டு ஆகும். அவன் உணவுக்காக எடுத்துச் சென்ற ஆடு எத்தனை?

..........................................

**8)** ஓலைப் பெட்டி ஒன்றில் 100 முட்டைகள் இருந்தன. அப்பெட்டியிலிருந்த முட்டைகளின் எண்ணிக்கையின் இரு மடங்கிலும் 9 முட்டைகள் குறைவாக காட்போட் பெட்டி ஒன்றில் இருந்தன எனின், இரு பெட்டிகளிலும் இருந்த முட்டைகள் எத்தனை?

..........................................

**9, 10 ஆம் வினாக்கள் பின்வரும் வரைபடத்தை அடிப்படையாகக் கொண்டவை**




9) மாத வருமானம் 1985இல் சுமார் எத்தனை ரூபா

1. ரூ 10000 2. ரூ 19000 3. ரூ 6000
4. ரூ 20000 5. ரூ 5000

10) மாதவருமானத்தில் மாற்றமில்லாதிருந்த காலப்பகுதி

1. 1965 – 1970 2. 1990 – 1995 3. 1980 – 1985
4. 1972 – 1978 5. 1970 – 1975

**புதிர்ப்போட்டி 47 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்**

பெயர் :- அன்ரன்ராஜ் நியூட்டன்
பாடசாலை:- யா/ நெடுந்தீவு மகா வித்தி.

பெயர் :- க.தனுஜாநெகேமி
பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.ம.கல்லூரி.

பெயர் :- வி.நிலேக்கா
பாடசாலை:- யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

பெயர் :- தோ.மேரிறொமி
பாடசாலை:- யா/ சென்.தோமஸ் றோ.க.மகளிர் பாடசாலை.

| நூல்கள் | ஆசிரியர் |
| --- | --- |
| 1) சூளாமணி | - தோலாமொழித்தேவர் |
| 2) தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| 3) மணிமேகலை | - சீத்தலைச் சாத்தனார் |
| 4) சிந்தாமணி | - திருத்தக்கதேவர் |
| 5) கீதாஞ்சலி | - ரவீந்திரநாத்தாகூர் |

**புதிர்ப்போட்டி 48 இற்கான சரியான விடைகள் அடுத்தவாரம் வெளியாகும்.**


**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப் பெயர் :- ..........................
பாடசாலையின் பெயர் ..........................
தரம் :- :- ..........................
தொலைபேசி இல.:- ..........................
முகவரி :- ..........................
..........................



# உயரப்புலம் பாடசாலைக்கு மாடிக்கட்டடத் தொகுதி திறப்பு

(திருநெல்வேலி)

உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் இருமாடி வகுப்ப றைக் கட்டடத் தொகுதி நேற்று முன்தினம் முற்பகல் 11.30மணிக்குத் திறந்து வைக்கப்பட்டது. ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் பிரதம் விருந்தினராகக் கல ந்துகொண்டு இக் கட்டடத்தை சம்பிரதாய பூர்வமாக நாடாவெட்டித் திறந்துவைத்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் பணிப்பின் பேரில் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் 5.8 மில்லியன் ரூபா செலவில் இக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத் திறப்புவிழாவில் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க கட்சித்தலைவரும், ஈ.பி. டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளருமான அ.ரவீந்திரதாஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.செல்வராஜா, யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராஜா, தென்னிந்திய திருச்சபையினைச் சேர்ந்த அருட்பணி அன்ரன் சவரிமுத்து மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், அபிவிருத்தி சபையினர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொணடனர்.

ஆரம்பத்தில் விருந்தினர்கள் பான்ட்வாத்திய சகிதம் அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற றல்,பெயர்ப் பலகைத்திரை நீக்கத்தைத் தொடர்ந்து கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் கு. திலீபன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இறைவணக்கம், வரவேற்புரை, தலைமையுரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும் உரையாற்றினர். நன்றியுரை நிறைவாக இடம்பெற்றது. (137)

# ஆலய உண்டியல் திருட்டு

(சாவகச்சேரி)

நுணாவில் விளைவேலி மருதா விநாயகர் ஆலயஉண்டியல் நேற்று அதிகாலை விசமிகளால் திருடப்பட்டுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது பழைமை மிக்க இவ்வாலயத்தின் மருதடிப் பிள்ளையார் சந்தியில் ஏறத்தாழ 50 கிலோ நிறையுடையஇரும்பாலான உண்டியல் 20 வருடங்களுக்கு மேலாக வைக்கப்பட்டிருந்தது. நேற்று அதிகாலையில் இவ்வுண்டியல் விசமிகளால் திருடப்பட்டுள்ளது. அப்பகுதி மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. வாகனம் ஒன்றில் வந்தோரே இவ்வாறு உண்டியலை தூக்கிச் சென்றுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ளது. இது ஒரு குழுவினரின் செயலாகவே கருதப்படுவதுடன் இச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

அதேவேளை இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இவ்வாலயத்தின் சிறியஇரும்பாலான உண்டியல் ஒன்று திருடப்பட்டிந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# புல்லாவெளி செபஸ்தியார் ஆலய வருடாந்த பெருவிழா

(குருநகர்)

யாத்திரைத் தலமான புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த பெருவிழா எதிர் வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஜூலை 8ஆம் திகதியில் இடம்பெற்று வந்த மேற்படி ஆலயத்திருவிழா இவ்வாண்டு தொடக்கம் குறித்த திகதி என்றில்லாமல் ஜூலைமாத முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் திருநாள்ஆராதனைகள் தினமும் மாலை 5 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும்.

6ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வைபவமும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

திருப்பலியை அடுத்து திருச்சொரூப பவனி நடைபெற்று சொரூப ஆசீர் வழங்கலுடன் பெருநாள் கொண்டாட்டங்கள் நிறைவடையும் என ஆலயத்தினர் அறிவித்துள்ளனர். (68)

# கடலாமை பிடித்த ஐவருக்கு நீதிமன்றத்தால் பிணை

(முழங்காவில்)

பூநகரி பள்ளிக்குடாக்கடல் பகுதியில் சட்ட விரோதமாக கடல் ஆமைகளைப் பிடித்த ஐந்து நபர்களை கடல் ஆமையுடன் பூநகரி பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர் படுத்தினர். பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து பூநகரி பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் ஆனந்த சுமணசிறி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் பிடிக்கப்பட்ட கடல் ஆமையையும் சம்பந்தப்பட்ட ஐந்து நபர்களையும் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போது பிடிக்கபட்ட கடல் ஆமையை மீண்டும் கடலில் விட நீதிபதி உத்தர



விட்டதுடன் சந்தெக நபர்கள் ஐவரையும் பிணையில் விட அனுமதி வழங்கினார் அத்தடன் எதிர் வரும் யூலை 4ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார். (112)





கைதடி சமுர்த்தி அலுவலகத்தில் பணியாற்றி பதவியுயர்வு பெற்றுச் செல்லும் செல்லையா ஜெயபாலனுக்கு பாராட்டு விழா கடந்த புதன்கிழமை கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கில் நடைபெற்றபோது பிரமுகர் ஒருவர் ஜெயபாலனுக்கு வாழ்த்துப்பா வழங்கிக் கௌரவிப்பதையும் அவருடன் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் காணலாம். (21)




## திரிபுபடுத்தும் செய்திகளால் திசைமாறும் அரசியல் பார்வை

மக்கள் சமகால அரசியலைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்காகவே ஊடகங்கள் உருவாக்கப்பட்டன. தனிப்பட்ட அரசியல் பார்வைகளை அடிப்படையாகக் கொண்டு செய்திகளைத் திரிபுபடுத்துவதனால் அரசியல் பார்வைகள் மக்கள் மத்தியில் திசைமாறுகின்றன. இந்த நிலை குடா நாட்டு ஊடகங்கள் சிலவற்றில் வலுப்பெற்று வருகின்றது. இது தற்கால அரசியல் பார்வையில் பல பின்னடைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இத்தனை இழப்புக்கள் இத்தனை துன்பங்களுக்கு காரணம் அரசியல் யதார்த்தம் புரியாத சிலரிற்கு மக்கள் அங்கீகாரம் கொடுத்தமையே ஆகும். இது தொடர்ந்தும் நிலைக்கக்கூடாது. அவ்வாறாயின் திரிபுபடுத்தும் செய்திகளை மக்கள் இனங்காண வேண்டும்.

மாகாணசபை அதிகாரங்கள் குறைக்கப்படுவது தொடர்பாக இலங்கையரசின் திட்டங்களிற்கு இடங்கொடுக்கக்கூடாது என இந்தியாவிடம் ஓடிய தமிழரசுக்கட்சி இந்தியா மூலம் எதைச் சாதித்தது. கட்டமிட்ட தலைப்புச் செய்திகள் பத்திரிகையில் வெளிவந்ததுதான் மிச்சமாச்சு. சற்று சிந்தித்துப் பாருங்கள். கொஞ்ச நாட்களிற்கு முன் சம்பந்தரையாவின் இந்திய விஜயத்தை அர்த்தமாக்க வேண்டும் என்பதற்காகவும், பத்திரிகை தலைப்புச் செய்திகள் சுவைபட அமைய வேண்டும் என்பதற்காகவும் குடா நாட்டு ஊடகமொன்றில் பின்வருமாறு தலைப்புச் செய்தி வந்தது.

13இல் மாற்றம் செய்ய இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது, சம்பந்தரிடம் மன்மோகன்சிங் உறுதி. இதில் எந்த அர்த்தம் உள்ளது என்பதை தற்போதய அரசியல் போக்குகள் தெளிவுபடுத்துகின்றன. சாதாரணமாக சொன்ன கருத்துக்களை உறுதி மொழியாக்கிய பெருமை எமது ஊடகங்களையே சாரும். "மேனனின் இலங்கைக்கான வருகை 13 தொடர்பான எந்தச் செய்தியையும் கொண்டு வரவில்லை, இதுவரை இந்தியா இது தொடர்பாக எம்மிடம் எதுவும் பேசவில்லை" என ஜனாதிபதி பத்திரிகையாளர் சந்திப்பில் கூறினார். ஜனாதிபதி கூறுவது பொய் என்றால் இந்தியா இது தொடர்பாக பேசியதை பகிரங்கப் படுத்தியிருக்கலாமல்லவா? ஆகவே இந்தியா இது தொடர்பாக இதுவரை எந்த நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை என்பது தெளிவாகின்றது. சம்பந்தரிடம் உறுதி மொழியைக் கொடுத்திருந்தால் அதை இந்தியா எப்போது காப்பாற்றப் போகின்றது?.....

தெரிவுக்குழுவில் அதிகாரங்கள் மட்டுப்படுத்திய பின்பா? புரியவில்லை. சம்பந்தர் உறுதி மொழியை உருவாக்கினாரா?.... ஊடகங்கள் உறுதி மொழிக்கு உரம் சேர்த்தார்களா? தெரியவில்லை.

இது ஒருபுறமிருக்க சர்வதேசத்தின் தலையீடுகளாலும், சர்வதேசத்தை நாடிச்சென்ற அரசியல்வாதிகளாலும் பல கட்டங்களில் தமிழரிற்கான தீர்வு திசை மாறியுள்ளது. இது எவருக்கும் புரியவில்லை தென்னிந்திய அரசியல்வாதிகள் தமது அரசியல் பலத்திற்கு உரம் சேர்க்க ஈழத் தமிழர்களை பயன்படுத்துகின்றனர். ஆனால் நாமோ சர்வதேச அங்கீகாரத்தில் தனித்தமிழீழம் மலருமென இன்றும் கனவு காண்கின்றோம்.

ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகின்றோம். இலங்கையின் இறைமைக்குள் தலையிட பெரும்பான்மை தென்னிலங்கை அரசியல் பலம் என்றுமே இடம் கொடுக்காது. இதை நடந்து முடிந்த அரசியல் அனுபவங்கள் மூலம் ஒவ்வொருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். வாய்க்கு வந்த வாய்ப்பைக் கைவிட்டுவிட்டு தமிழரசுக் கட்சி அடுத்த வீட்டு உலையில் அன்னம் கேட்கின்றது. இதனை நியாயப் படுத்தும் ஊடகங்கள் அதற்கு உருவேற்றிக் கொண்டிருக்கின்றன. அரசியல்வாதிக்குள் ஊடகங்கள் இருக்கலாம் ஊடகத்திற்குள் அரசியல்வாதிகள் இருக்கக்கூடாது.

13இல் மாற்றம் கொண்டுவர இந்தியா ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டாது எனச் செய்தியை திரிபுபடுத்திய அதே ஊடகம் மேனனின் வருகை அர்த்தமற்றுப் போனது தொடர்பாக ஆசிரியர் கருத்தில் அலசி உள்ளது. முன்பின் முரணான கருத்துக்களைக் கூறி மக்களை ஏமாற்றும் ஊடகங்கள் தமிழர் வரலாற்றுத் துரோகம் செய்தவர்களில் ஒரு வலுவான தரப்பினரே. இது ஜனநாயக நாடு. மக்களின் வாக்குரிமையே நாட்டின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். அத்தகைய அதிகாரங்கள் கொண்ட மக்களிற்கு நிதர்சன அரசியலை நியாயப்படுத்த வேண்டியது ஊடகதர்மமாகும். உசுப்பேத்தும் வரிகளிற்கு உரம் சேர்த்தால் அழிவுகள் தான் தமிழரிற்கு மிச்சமாகும்.

# உரத்திற்கு பலத்த தட்டுப்பாடு விவசாயச் செய்கையும் பாதிப்பு

## கவலையடையும் விவசாயிகள்

உரத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

உரத்தின் விலை அதிகரித்ததையடுத்து, அரசாங்கம் மானிய விலையில் விவசாய சேவை நிலையங்களின் ஊடாக உரத்தை விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

ஆயினும், இவ்வாறு வழங்கப்படுகின்ற உரத்தின் அளவும் படிப்படியாகக் குறைக்கப்பட்டிருப்பதாக வவுனியா வடக்கு ஒருங்கிணைந்த மாதிரி பண்ணையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வைரமுத்து பூபாலசிங்கம் தெரிவித்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு, ஒரு ஏக்கருக்கு 106 கிலோ யூரியாவும், 30 கிலோ எம்.ஏ.பியும், 35 கிலோ டி.எஸ்.பியும் மானிய விலையில் விவசாயிகளுக்கு அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்டது.

இப்போது யூரியா 64 கிலோவாகவும், பொட்டாசியம் 16 கிலோவாகவும், பொஸ்பேட் 16 கிலோவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக பூபாலசிங்கம் தெரிவித்தார். இது விவசாயத் தேவைக்குப் போதாது என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அதேநேரம், நெல் பயிரிடுவதற்கு மட்டுமே விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கப்படுகின்றது.

வெங்காயம் போன்ற மேட்டு நிலப் பயிர்ச்செய்கைகளுக்கு உரம் மானிய விலையில் வழங்கப்படுவதில்லை என்று கூறும் பூபாலசிங்கம் வெளிச்சந்தையில் உரத்தை வாங்குவதற்கும் வழியில்லை எனவும் தெரிவித்தார்.

வெளிச்சந்தையில் உரம் கிடைப்பதில்லை என்றும் அதன் காரணமாக விவசாய நடவடிக்கைகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக பூபாலசிங்கம் குறிப்பிடுகின்றார்.

முன்னர் ஒன்றுக்குப் பதினைந்து என்ற விகிதத்தில் விளைந்த வெங்காயம், உரம் இல்லாத காரணத்தினால், ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து என்ற விகிதத்தில்தான் அறுவடை செய்ய முடிகின்றது என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

# கருத்தரங்கிற்குத் தடை ஆசிரியர் சங்கம் கண்டனம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் நடைபெறுவதற்கு ஐந்து தினங்களுக்கு முன்னதாக, பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு கருத்தரங்குகளை நடத்த கல்வி அமைச்சு தடை விதித்துள்ளது.

இந்த முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான தினத்தில் இருந்து ஐந்து தினங்களுக்கு முன்னதாக கருத்தரங்குகளை நடத்துபவர்களுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எனினும் கல்வி அமைச்சின் இந்தத் தீர்மானம் மாணவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக அமைந்திருப்பதாக, இலங்கை ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மாணவர்களுக்காக எந்த சேவையையும் செய்யாத கல்வி அமைச்சு, அவர்களுக்கு எதிராக அநாவசியமான சட்டங்களை அமுலாக்கி வருவதாகவும் அந்தச் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

# வடக்கில் தாவரவியற்பூங்கா டிசம்பருக்கு முன் அமையும்



முப்பது வருட யுத்தம் நிறைவு பெற்றதை அடுத்து வடமாகாணத்தில் புதிதாக தாவரவியற் பூங்கா ஒன்று அமைக்கப்படும். எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்கு முன்னர் தாம் இந்தப் பூங்காவை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக தாவரவியற் பூங்கா மற்றும் பொழுது போக்கு அமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சுற்றுலாத்துறை பெரும் பங்காற்றுகிறது. எனவே உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் இலங்கையின் தாவரவியற் பூங்காக்களை மேலும் அதிகரிப்பதற்கு தாம் உத்தேசித்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஹங்செல்லை, அம்பாந்தோட்டை ,மிரிஜ்ஜவிலை ஆகிய பகுதிகளிலும் தாவரவியற் பூங்காக்கள் அமைக்கப்படும் என்றும் இந்தப் பூங்காக்களுக்குத் தேவையான மிருகங்களை ஜப்பான், கொரியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் ஜயரத்ன ஹேரத் பேராதனை தாவரவியற் பூங்காவைப் பார்வையிடச் சென்ற போதே மேற்படி தகவலைத் தெரிவித்தார்

# தரம் 2 மாணவிகள் துஷ்பிரயோகம் விளக்க மறியலில் ஆசிரியர்

இரண்டாம் வகுப்பில் கல்விபயிலும் மாணவிகளில் ஆறு பேரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் 58 வயதான ஆசிரியரை எதிர்வரும் 08 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு காலி மேலதிக நீதவான் குனேந்திர குமார முனசிங்க உத்தரவிட்டுள்ளார்.

பயிற்சிப் புத்தகங்களை காண்பிப்பதற்காக ஆசிரியரின் அருகில் செல்கின்ற மாணவிகளின் முகம் மற்றும் வயிற்றுப் பகுதிகளை தடவுவதாக ஏழு வயதான மாணவியொருவர் பொலிஸில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே ஆசிரியரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலிஸார். அவரை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்திய போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்த ஆசிரியர் இன்னும் இரண்டு மாதங்களில் ஓய்வுபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# 8000 பணியாளர்களை அழைத்துவர ஏற்பாடு

சவுதி அரேபியாவில் தொழிலுக்குச் சென்று சட்டவிரோதமாக அங்கு தங்கியிருக்கும் மேலும் எண்ணாயிரம் இலங்கைப் பணியாளர்களை நாட்டிற்கு திருப்பியழைக்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தீர்மானித்துள்ளது.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கான முதற்கட்ட ஏற்பாடுகளை ஏற்கனவே பூர்த்தி செய்துள்ளதாக பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளரும் ஊடகப் பேச்சாளருமான மங்கள ரன்தெனிய தெரிவித்துள்ளார்.

தொழிலுக்காகச் சென்று சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த சுமார் இரண்டாயிரத்து 200 பணியாளர்கள் ஏற்கனவே இலங்கைக்கு அழைத்துவரப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

# வெள்ளத்திலிருந்து மீட்கப்பட்ட இலங்கை சுற்றுலாப் பயணிகள்

இந்திய வெள்ளத்தில் சிக்கிய இலங்கை சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தியாவின் உத்தரகாசி பகுதியில் பாரியளவில் மழை வெள்ளம் ஏற்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இமய மலைப் பகுதியில் சிக்குண்டிருந்த 43 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கிராம மக்கள் மீட்டுள்ளனர். அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் உணவு, குடிநீர் வசதியின்றி பாதிக்கப்பட்டிருந்ததாகவும் கிராம மக்கள் அவர்களுக்கு உதவிகளை வழங்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உத்தரகாசி தபோவன யோகா பயிற்சி மையத்திற்கு சென்றிருந்த சுற்றுலாப் பயணிகளே வெள்ளத்தில் சிக்கியிருந்தனர்.

# ஆட்டோவில் கண்ணாடி பெண்களே கவனம்

முச்சக்கரவண்டிகளில் பெண்களைப் பயணிக்கவேண்டாமென பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மத்துகம பிரதான பொலிஸ் அதிகாரியான பீ.லுலோவைக் கேவே மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.

முச்சக்கரவண்டிக்குள் கண்ணாடியைப் பொருத்தும் முச்சக்கரவண்டிச் சாரதிகள், முச்சக்கரவண்டிகளில் பயணிக்கும் பெண்களின் அங்கங்களை பார்த்து இரசிப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே அவர் மேற்கண்டவாறு பெண்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறு கண்ணாடி பொருத்தப்பட்ட 19 முச்சக்கர வண்டிகளை தாம் மத்துகம பகுதியில் கைப்பற்றியுள்ளதாகவும் அவற்றை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், முச்சக்கர வண்டியில் பக்கவாட்டு கண்ணாடிகள் இரண்டும் நடுவில் ஒரு கண்ணாடி இருப்பது மட்டும் போதுமென்றும் பொலிஸார் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

# ஹெரோயின் குற்றவாளிக்கு மரணதண்டனை தீர்ப்பு



(கொழும்பு)

3.3 கிராம் ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரணதண்டனை விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரசேனவே மேற்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளார்.

மஹரகமவைச்சேர்ந்த விதான பத்திரனகே சமன் தனஞ்சவுக்கே இவ்வாறு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றத்திற்காக இவருக்கு ஏற்கனவே, இரண்டு வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையும், 15ஆயிரம் ரூபா தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே இதே குற்றத்திற்காக அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டமையினால் அவருக்கு மரண தண்டனை விதிப்பதாக நீதிபதி தனது தீர்ப்பில் அறிவித்தார்.

# நாடளாவிய ரீதியில் 210 பாலங்கள் நிர்மாணம்

நாடளாவிய ரீதியில் கிராமப்புறப் பாதைகள் ஊடாக 210 பாலங்களை நிர்மாணிப்பதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை மாத்தளை மாவட்டத்தில் முதலில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் கிராமப்புற பாலம் நிர்மாணத்துறைத் திட்டத்தின் இணைப்பதிகாரியான பொறியியலாளர் சந்தன குணதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

மகநெகும அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களுக்கான பாலங்களை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த வருடத்திற்குள் சுமார் 70 பாலங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஏனைய எஞ்சிய பாலங்களை அடுத்த வருடத்திற்குள் நிறைவுசெய்ய எண்ணியுள்ளதாக சந்தன குணதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

29. பொருள் ஒன்றின் விலை குறியீட்டு வடிவில் KMV.MP எனக்குறிக்கப்பட்டிருந்தது. பொருளின் விலையை குறிக்கும் விடையை தெரிவு செய்க.

1) 435.00    2) 638.75    3) 352.50

30. 

இவ்வுபகரணம் எத்தொழிலுடன் தொடர்புடையது.

1) விவசாயம்    2) மட்பாண்டம்    3) மீன்பிடி


31. 

பொது இடங்களில் காணப்படும் சில குறியீடுகள் குறிக்கும் கருத்தை தெரிக.

1) ஆண்கள் மட்டும்
2) பெண்கள் மட்டும்
3) பாதசாரிக்கடவை

32. 

1) இங்கே புகைக்கலாம்
2) புகைத்தல் உடல் நலத்துக்கு தீங்கு
3) புகைத்தல் தடை

33. 

1) சிற்றுண்டிச்சாலை
2) பீங்கான் தொழிற்சாலை
3) கரண்டிகள் விற்குமிடம்

❖ **தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் கருத்துள்ள வாக்கியத்தை அமைக்கமுடியும். அவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்ட விடையின் கீழ் கோடிடுக.**

34. A - வாழவே    B - மிருகங்கள்    C - விரும்புகின்றன    D - சுதந்திரமாக

1) D,B,C,A    2) B,D,A,C    3) B,C,A,D

35. A - படுத்திருக்கும்    B - போலக்    C - சீகிரியா    D - சிங்கம்    E -காட்சிதரும்

1) B,C,A,E,D    2) C,E,A,D,B    3) C,A,D,B,E

❖ **36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

36. இவ்வாண்டு ஒலிம்பிக் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெறவுள்ளன? ..........................................

37. நான் விளையாடிய விளையாட்டில் ஒரு அணியில் 6 பேர் விளையாடுவர். இலங்கையின் தேசிய விளையாட்டாகிய இவ்விளையாட்டின் பெயர் யாது?

..........................................

3 9 1 2
6
5 8 4 7

38. கட்டத்தில் உள்ள இரட்டை எண்கள் எத்தனை? ..........................................

39. கட்டத்தில் உள்ள ஒற்றை எண்களின் கூட்டுத்தொகை யாது? .................

40.

| 36 | 31 | 27 | 24 | .......... |
|---|---|---|---|---|

புள்ளிக்கோட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.




# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு


1.30 மணி



❖ முதலில் தரப்பட்ட உருவை ஒத்த உருவை தெரிந்து கோடிடுக.


01. 


(1)    (2)    (3)

02. 


(1)    (2)    (3)


❖ 3ஆம், 4ஆம் வினாக்களில் அடுத்துவரும் உருவை தெரிந்து கோடிடுக.

03. 



1)    2)    3)

04. 



1)    2)    3)

❖ **புள்ளிக்கோட்டிற்கு பொருத்தமான விடையை தெரிந்து கோடிடுக.**

05. அவர்கள் எங்களை தம்மை நோக்கி வருமாறு ..........................

1) அழைத்தார்கள்    2) அழைத்தீர்கள்    3) அழைத்தோம்

06. ................. ஓவியங்களை ஒத்த ஓவியங்கள் இலங்கையிலும் உள்ளன.

1) சீகிரியா    2) அஜந்தா    3) மோனலிசா

07. இன்று உலகின் .......................... எங்கும் கணனியின் ஆதிக்கமே

1) மேடுபள்ளம்    2) மூலைமுடுக்கு    3) காடுமேடு

08. பிழையான கருத்து இடம்பெறும் விடையின் கீழ் கோடிடுக.

1) காலையில் தாமரை மலர்கள் மலர்ந்தன.
2) தினமும் சூரியன் கிழக்கு வானில் உதிக்கும்.
3) காகம் ஓர் தாவர உண்ணி

09. 1) பூக்கள் யாவும் காய்களை உருவாக்குகின்றன.
2) இலங்கையின் நீளமான நதி மகாவலி கங்கை
3) இலங்கை ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

❖ தரப்பட்ட தொடர்பை அவதானித்து அதற்கேற்ப தொடர்புள்ள விடையின் கீழ் கோடிடுக.

10. பானை - மண்



1) கதிரை - தளபாடம் 2) செருப்பு - இறப்பர் 3) பேருந்து - டீசல்

11. நான் - தன்மை ஒருமை




1) நீங்கள் - படர்க்கை பன்மை 2) அவன் - படர்க்கை பன்மை 3) நீ - முன்னிலை ஒருமை

❖ மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.


12. எட்டு உச்சிகளையும் ஆறுமுகங்களையும் உடைய திண்ம உருவை தெரிக.

1)  2)  3) 

13. மூன்றுக்கு பத்து நிமிடம் என்பதை காட்டும் கடிகார முகத்தை தெரிக.

1)  2)  3) 

14. 1kg 500g சீனியை 250g கொண்ட எத்தனை பைக்கற்றுகளில் அடைக்கலாம்.
1) 10 2) 6 3) 4

15. 
உருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 16 2) 27 3) 30

16. மடக்கேறும் அரவும் என்னும் உயிர்க்குறியை கொண்ட சொல் எது?
1) சூரியன் 2) கொம்பு 3) நூலகம்

17. வானம் மீதெழுவேன் - அங்கே
வட்டம் சுற்றிடுவேன்
கான மலையெல்லாம் - யானோர்
கணத்தில் தாண்டிடுவேன்.

இப்பாடல் யார் பாடுவதாக உள்ளது.
1) ஓர் விமானம்
2) ஓர் பட்டம்
3) ஓர் பறவை

18. "நாளை மறுநாள் கொழும்புக்கு வருவேன்" என விமல் நேற்று கூறினான். அதன்படி விமல் கொழும்புக்கு செல்வது.
1) இன்று 2) நாளை 3) நேற்று

19. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.
1) கப்பல், மீன், மீனவன் 2) படகு, கரை, மீன் 3) கரை, நீர், மீன்



19) 548
+31A
8B2

A,B, என்பவை குறிப்பவை முறையே
1) 4, 6 2) 6, 3 3) 4, 5

A,B,C,D ஆகிய கட்டங்களில் தரப்பட்டுள்ள சொற்களை அவதானியுங்கள் அதற்கேற்ப தரப்பட்ட வினாக்களுக்குரிய விடையை தெரிந்து கோடிடுக.


| A | B | C | D |
|---|---|---|---|
| நாய் | தேனீ | கொக்கு | பூனை |
| சருகுமான் | தும்பி | முதலை | கோழி |
| கழுகு | வண்ணத்துப்பூச்சி | கிவி | ஆமை |
| காகம் | வீட்டு ஈ | பல்லி | சிங்கம் |

20) ஆறு கால் பிராணிகள் மட்டும் அடங்கிய அடைப்பை தெரிக.
1) A 2) B 3) C

21) அனைத்தும் உண்ணிகள் இரண்டு வீதம் அடங்கிய அடைப்பை தெரிவு செய்க.
1) Aஉம் Dஉம் 2) B உம் C உம் 3) A உம் C உம்


22) முட்டையிட்டு இனம் பெருக்கும் பிராணிகள் உள்ள அடைப்புக்கள் எவை?
1) Bஉம் Dஉம் 2) D உம் Cஉம் 3) Bஉம் Cஉம்

**கீழே தரப்பட்ட கணித செய்கையின் படி 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




23)  இவ்வுருவின் பெறுமானம் யாது? 1) 9 2) 13 3) 11

24)  இவ்வுருவின் பெறுமானம் யாது? 1) 6 2) 7 3) 10

25) 




கம்பித்துண்டு ஒன்றை பயன்படுத்தி செய்யப்பட்ட முக்கோணியின் உரு காட்டுகிறது. இந்த கம்பித்துண்டை பயன்படுத்தி செய்யப்பட்ட சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?
1) 8cm 2) 6cm 3) 5cm

26) வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய கணிதச் செய்கை குறியீடுகள் எவை?

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | | 4 | = | 7 |
| 15 | | 5 | = | 10 |
| 15 | | 3 | = | 5 |

1) + − ÷ 2) + − × 3) + × ÷

27) கோயிலில் மங்கள வாத்தியமாக இசைக்கப்படும் இசைக்கருவியை தெரிக.

1)  2)  3) 

### தெல்லிப்பளையில் மீள்குடியேறிய பகுதிகளில்

# குழாய்க்கிணறுகளுக்கு நீர்ப்பம்பிகள்

## செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட எட்டுக் குழாய்க் கிணறுகளுக்கும் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படும் நீர்ப்பம்பி பொருத்தப்படவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் கு.பாலகிருஸ்ணன் தொவித்துள்ளார்.

உளளூரில் உற்பத்தி செய்யப்படும் நீர்ப்பம்பிகளை பொது இடங்களில் பொருத்துவதினால் குறுகிய காலத்தில் பழுதடைந்து விடுவதுடன் அதனை மீண்டும் யாரும் திருத்தி பயன்படுத்தும் நிலமையும் காணப்படுவதில்லை.

இதனால் தேவையற்ற முறையில் நிதி பயன்பாடு அற்ற தன்மை ஏற்படுவதுடன் பணம் செலவு செய்தும் பொதுமக்கள் பயன்பெற முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

இத்தகைய நிலமையை போக்கும் வகையில் இலங்கை நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபையுடன் தொடர்பு கொண்டதன் பெயரில் தரமான கைப்பம்மை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்து பொருத்துவதன் மூலம் ஐம்பது வருடங்களுக்கு குறிப்பிட்ட நீர்ப்பம்பிகள் பழுதடையமாட்டாது எனவும் அதற்கு உத்தரவாதம் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒரு கைப்பம்முக்கு சுமார் ஒரு இலட்சத்தி இருபத்தையாயிரம் ரூபா செலவிடுவதாகவும் விரைவில் குறிப்பிட்ட எட்டுக் குழாய்க் கிணறுகளுக்கும் கைப்பம்கள் பொருத்தப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு விடபடும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைவிட திறந்த கிணறுகள் இருபத்தெட்டு புனரமைப்பு செய்யப்பட்டு பொது மக்களுடைய பாவனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் திறந்த கிணறுகளுக்கும் தலா தொண்ணூறாயிரம் ரூபா வீதம் இருபத்தைந்து இலட்சம் ரூபாவும் குழாய் கிணறுகள் எட்டுக்கும் பதினான்கு இலட்சம் ரூபாவுமாக நாற்பத்தொன்பது இலட்சம் ரூபா செலவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.







# முத்திரையிடாமல் பயன்படுத்திய நிறுத்தல் கருவிகள் பறிமுதல்

(சுன்னாகம்)

சுன்னாகம் சந்தைப் பகுதியில் முத்திரையிடப்படாத நிலையில் பயன்படுத்தப்பட்ட நிறுத்தல் அளவுக் கருவிகள் வலிகாம தெற்கு பிரதேச சபையினால் நேற்று முன்தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபைத்தலைவர் பிரகாஸ் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் உழவர் சந்தை, மீன்சந்தை, நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களில் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரும் மாவட்டச் செயலகத்திலிருந்து வருகைதந்த நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு முத்திரையிடும் பிரிவு உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொண்ட தீடீர் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது 14 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் தவறானது அல்லது முத்திரையிடப்படாத நிறுத்தற்கருவிகள் பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டது.

கருவிகளுக்கு முத்திரையிடும் பணிகள் ஒழுங்குமுறைப்படி வர்த்தகர்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டு வழமையாக நடைபெறுகின்றன. இதில் முத்திரையிடப்படாத நிறுத்தற் கருவிகளை முத்திரையிட்டவற்றுடன் இணைத்து பயன்படுத்தியமையும் கண்டறியப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளையும் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தீர்மானிக்கப்பட்டதற்கும் இனங்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சீருடை அணிவது கட்டாயம்

### யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் பணிபுரியும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அனைவரும் கண்டிப்பாக சீருடை அணியவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென சபையின் ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்த கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, சுகாதார பரிசோதகர்கள் பணியின் போது சீருடை அணிவதில்லை என்ற குற்றச்சாட்டினை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்தனர் இதனையடுத்தே ஆணையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், மாநகர சபையின் பொதுச சுகாதாரப் பரிசோதகர்கள் சீருடை இன்றி சோதனைகளில் ஈடுபட வேண்டாம். அவ்வாறு சீருடை இன்றி சோதனையில் ஈடுபடுவோர் கடுமையாக தண்டிக்கப்படுவர் என்றார்.

மேலும், மாநகர சபை எல்லைக்குள் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்குவதற்கு முன்பெல்லாம் 4 மாதங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால, தற்போது ஒரு நாளில் அனுமதி வழங்கப்படுகின்றது. இந்த அனுமதி இலங்கையில் எந்தவொரு சபையினாலும் வழங்கப்படுவதில்லை. அவ்வாறு இருந்தும் யாழ். மாநகரசபைப் பகுதியில் அனுமதியற்ற கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன என்றும் சுட்டிக் காட்டினார்.

அந்த வகையில், 450 இடங்களில் கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கட்டட உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை கடிதம் (சிவப்பு நோட்டீஸ்) வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாநகர சபையினால் தற்போது இந்தவொரு நடவடிக்கை மாத்திரமே மேற்கொள்ள முடியும் என்றார்.

# உக்ரேன் பிரஜைகளுக்கு இரண்டுவருட கடூழிய சிறை

உக்ரேன் நாட்டு பிரஜைகள் இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரீதி பத்மன் சூரிசேன இரண்டு வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். போலி கடன அட்டைகளை பயன்படுத்தி பல வங்கிகளின் தன்னியக்க பண பரிவர்த்தனை இயந்திரங்களிலிருந்து 11.1 மில்லியன் ரூபா வரையில் களவாகஎடுத்தல் உட்பட அவர்கள் மீது சுமத்தப்பட்ட 26 குற்றங்களை ஒப்புக்கொண்டதையடுத்தே அவ்விருவருக்கும் கடூழிய சிறைத தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையருக்கு தொழில்வாய்ப்பு

இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்க சிங்கப்பூர் முன்வந்துள்ளது. கட்டட நிர்மாணத்துறையில் சிங்கப்பூர், இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கவுள்ளது. முதற்கட்டமாக 200 தொழிலாளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட உள்ளது. இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களே இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். சீனா, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 270000 பேர் கட்டட நிர்மாணத்துறையில் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இராமேஸ்வரம் மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களுக்கும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த மீனவர்கள் நேற்று முன்தினம் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது குறித்த மீனவர்களை எதிர்வரும் யூலை மாதம் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது கடற்படையினரால் குறித்த 8 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட போது 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் மீண்டும் 8 மீனவர்களையும் எதிர்வரும் யூலை மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.




"அவளின் கவிதைகள்" கண்காட்சி நேற்று வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் ஆரம்பமானது. யாழ். மாவட்ட பெண்கள் சமாசத் தலைவர் ஈஸ்வரி சிறிதரன் கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார். நேற்றுத் தொடங்கிய இக்கண்காட்சி இன்றும் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொண்டவர்கள் கண்காட்சியைப் பார்வையிடுகின்றனர். (படம் - ராஜ்குமார்)

# மழை வெள்ளம், மண்சரிவில் சிக்கிய மூவாயிரம் பேர் மீட்கப்படவேண்டும்

## இந்திய இராணுவத்தளபதி தெரிவிப்பு



வட இந்தியாவின் உத்தர கண்ட் மாநிலத்தில் மழைவெள்ளம் மற்றும் மண்சரிவுகளில் சிக்கியவர்களில் மேலும் 3,000 பேர் வரையில் இன்னும் வெளி வர முடியாமல் மாட்டிக்கொண்டிருப்பதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

அங்கு இதுவரை 800 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உத்தரகண்ட் மாநிலத்தில் மீட்பு நடவடிக்கைகளை ஆராய்வதற்காக சென்றுள்ள இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங், பெரும்பாலானவர்கள் பத்ரிநாத் கோவில் நகரிலேயே சிக்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்களின் எண்ணிக்கை 350 ஆக இருக்கலாம் என்று முன்னர் ஊகிக்கப்பட்டதற்கு மாறாக, அந்த எண்ணிக்கை 3,000 வரை இருக்கலாம் என்று மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்பு நிவாரண முகாம்களில் நோய் பரவும் அபாயம் இருப்பதாக தொண்டு நிறுவனங்கள் எச்சரித்திருந்த நிலையில், மேலும் 43 சடலங்கள் எரிக்கப்பட்டுள்ளன.

இந்த அழிவில் மாட்டிக் கொண்டவர்களில் இதுவரை ஒரு இலட்சம் பேர் வரையில் மீட்புப் பணியாளர்களால் பத்திரமாக மீட்கப்பட்டிருக்கிறார்கள்.

மலைப்பகுதிகளுக்குள் சிக்கிக்கொண்டு தவிக்கும் யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைத் தேடி விமானப் படையினர் தொடர்ந்தும் ஹெலிகொப்டர்கள் மூலம் அங்கு சென்றுவருகின்றனர்.

நேற்றுக் காலை உத்தர கண்ட் சென்ற இந்திய இராணுவத்தளபதி ஜெனரல் பிக்ரம் சிங், கேதார்நாத் கோவில் நகரில் சிக்கியிருந்த அனைவரும் மீட்கப்பட்டுவிட்டதாகவும், 500 பேர்வரையில் தற்போது மீட்கப்பட்டுவருவதாக ஹார்சில் பகுதியிலிருந்து தகவல் வந்துள்ளதாகவும், மேலும் 2,500 பேர் வரையில் பத்ரிநாத் கோவில் நகரில் சிக்கியிருப்பதாகவும் கூறினார்.

காலநிலை ஒத்துழைத்தால் அவர்களும் விரைவில் மீட்கப்பட்டுவிடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

# கடந்த கால அனுபவங்கள் மூலம் பாடம் கற்றுள்ள ஆஸி பிரதமர்

புதிதாக மீண்டும் பதவிக்கு வந்துள்ள அவுஸ்ரேலியப் பிரதமர் கெவின் ரட், கடந்த கால அனுபவங்களின் மூலம் பாடம் படித்துள்ளதாகவும் தனது சக அமைச்சர்களுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தியே பணிகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில் முடிவுகள் எடுக்கும் போது யாருடனும் கலந்து ஆலோசிப்பதில்லை என்று கெவின் ரட் மீது கடுமையான விமர்சனங்கள் இருந்துவந்தன.

முன்னாள் பிரதமர் ஜூலியா கில்லார்டை தொழிற்கட்சித் தலைமையிலிருந்து வெளியேற்றி இரண்டு நாட்களின் பின்னர் தனது முதலாவது செய்தியாளர் சந்திப்பில் கெவின் ரட் நேற்று கலந்துகொண்டார்.


இதேவிதமாக, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கெவின் ரட், தொழிற்கட்சியில் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த ஜூலியா கில்லார்டால் தலைமையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

இப்போது மீண்டும் அவுஸ்ரேலியாவின் 26ஆவது பிரதமராக ரட் நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

வரும் செப்ரெம்பர் 14ஆம் திகதி நடக்கவுள்ள அவுஸ்ரேலியாவின் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி தோல்வியைத் தழுவும் என்றே, கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

ஆனால் கில்லார்டை விட, கெவின் ரட்டின் தலைமையில் அக்கட்சியால் ஓரளவுக்கு ஆதரவைத் திரட்ட முடியும் என்றும் கூறப்படுகிறது.

# மாநிலங்களவைத் தேர்தல் அ.தி.மு.க தி.மு.க. வெற்றி



தமிழகத்தின் சட்டப் பேரவையிலிருந்து இந்திய நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைக்கு நடந்த தேர்தல்களில், எதிர்பார்த்தபடியே, ஆளும் அ.தி.மு.க.வின் நான்கு வேட்பாளர்களும், அதன் ஆதரவு பெற்ற ஒரு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரும், தி.மு.க.வின் வேட்பாளர் கனிமொழியும் வெற்றி பெற்றுள்ளனர்.

அ.தி.மு.க.வின் மைத்ரேயன், அர்ஜுனன், ரத்தினவேல் ஆகியோர் தலா 36 வாக்குகளும், அக்கட்சியின் லட்சுமணன் 35 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றனர்.

இந்தியக் கம்யூனிஸ்டின் டிராஜா 34 வாக்குகள் பெற்றார்.

தி.மு.க.வின் கனிமொழி 31 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

தே.மு.தி.க.வின் இளங்கோவன் 22 வாக்குகளை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தார்.

ஒரு வாக்கு செல்லாது என்று அறிவிக்கப்பட்டது. அது கனிமொழிக்கு சென்றிருக்கவேண்டியது.

வெற்றி பெற்ற நான்கு அதிமுக மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்களுடன் ஜெய லலிதா


தி.மு.க.வின் 23 உறுப்பினர்கள், காங்கிரசின் ஐந்து, மனித நேய மக்கள் கட்சி மற்றும் புதிய தமிழகம் ஆகியவற்றின் தலா இரண்டு என கனிமொழிக்கு 32 வாக்குகள் கிடைத்திருக்கவேண்டும் .

ஆனால் 31தான் கிடைத்திருக்கிறது, ஆக அவரை ஆதரித்திருக்கவேண்டிய யாரோ ஒரு சட்டமன்ற, உறுப்பினர் செல்லாத வாக்களித்திருக்கிறார்.

ஆனால் அவர் யார் என்பது அடையாளப்படுத்தப்படவில்லை.

மற்றபடி அதிருப்தியாளர் எழுவரைத் தவிர தே.மு.தி.க.வின் 22 பேரும் அக்கட்சி வேட்பாளருக்கே வாக்களித்திருக்கின்றனர் என்பது அக்கட்சித் தலைமைக்கு சற்று ஆறுதலான செய்தியாகும்.

# பரிதி இளம் வழுதி அ.தி.மு.க.வில்



தி.மு.க.வின் முன்னாள் துணைப் பொதுச்செயலாளர் பரிதி இளம் வழுதி நேற்றுக் காலை தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து அ.தி.மு.க.வில் இணைந்தார்.

தி.மு.க.வின் அபிமன்யு என்று வர்ணிக்கப்பட்டவர் பரிதி இளம் வழுதி. 1991 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முற்றுமுழுதாக தோல்வியடைந்த காலகட்டத்தில் தி.மு.க.வில் வெற்றியடைந்த வேட்பாளர்கள் இருவர். ஒன்று கருணாநிதி, மற்றொருவர் பரிதி இளம்வழுதி.

1991 முதல் 1996 வரையிலான அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் தமிழக சட்டமன்றத்தில் தி.மு.க.வைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஒரே நபர் பரிதி இளம்வழுதி. இதனாலேயே கருணாநிதி பரிதியை அஞ்சாநெஞ்சர் என்றும், தி.மு.க.வின் இந்திரஜித் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

## உலகச் செய்திகள்

# புற்றுநோயை ஏற்படுத்தவல்ல மூன்று மருந்துகளுக்குத் தடை




இந்தியாவில் பரவலாக உபயோகிக்கப்படும் சர்க்கரை நோய்க்கான பயோக்ளிட சோன், வலி நிவாரணியான அனால்ஜின், மனச் சோர்விற் கான டீன்சிட் ஆகிய மூன்று மருந்துகளையும் தடை செய்ய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

ஒரு மருந்து உற்பத்தி செய்யப்படும் நாட்டில் அதன் பக்கவிளைவுகள் கருதி தடை செய்யப்பட்டால் அந்த மருந்தினை இந்தியாவிலும் தடை செய்ய வேண்டும் என்பது சட்ட விதிமுறைகளில் ஒன்றாகும்.

அதுபோல், அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் தடை செய்யப்பட்டு, இந்தியாவில் இன்னும் விற்பனையாகிக் கொண்டு இருக்கும் மருந்துகளை முற்றிலும் நீக்கும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக இறங்கியுள்ளது..அதன் விளைவாக, பரவலாக உபயோகிக்கப்படும் சர்க்கரை நோய்க்கான பியோக்ளிடசோன், வலி நிவாரணியான அனால்ஜின், மனச்சோர்விற்கான டீன்சிட் ஆகிய மூன்று மருந்துகளையும் தடை செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகம் இந்த மருந்துகளின் உற்பத்தியையும், விற்பனையையும் உடனடியாக நிறுத்துமாறு அறிக்கை விடுத்துள்ளது.

இது குறித்த உத்தரவும் குறிப்பிட்ட மருந்து நிறுவனங்களுக்கு இந்த மாதம் 18ஆம் திகதியேஅனுப்பப்பட்டுவிட்டதாகத் தகவல் தெரிவித்துள்ளது.

சர்க்கரை நோய்க்கான மருந்து, இதய நோய்க்கும், சிறுநீரகப்பையில் தோன்றும் கான்சர் நோய்க்கும் வழிவகுக்கும் என்று நம்பப்படுகின்றது.

# வங்கதேசத்திற்கான வர்த்தக சலுகை நிறுத்துவதற்கு அமெரிக்கா முடிவு



வங்கதேசத்தில் தொழிலாளர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் மோசமாக இருப்பதாக தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் இருந்துவருகின்றன.

இந்த நிலையில் வங்கதேசத்துக்கு அளிக்கப்பட்டுவந்த வர்த்தக-சலுகை நடைமுறையை மீளப் பெற்றுக்கொள்ள அமெரிக்க அரசு எடுத்துள்ள முடிவினை வங்கதேச அரசு விமர்சித்துள்ளது.

வங்கதேசத்தில் ஆடைத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் நிலைமைகள் அபாயகரமானதாக உள்ளதாக சுட்டிக்காட்டியே அந்நாட்டுடனான சிறப்புச் சலுகைத் திட்டம் அமெரிக்காவினால் வாபஸ் பெறப்படுகின்றது.

இந்த அறிவிப்பு அதிர்ச்சி அளிப்பதாக வங்கதேச வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆடைத் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஊக்குவிக்க தெளிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வங்கதேசம் கூறுகிறது.

கடந்த ஏப்ரலில் தலைநகர் டாக்கா அருகே தொழிற்சாலை கட்டடமொன்று இடிந்து விழுந்ததில் ஆயிரத்து நூறுக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையிலேயே, வங்கதேசத்தில் தொழிலாளர்களின் உரிமைகளும் வேலைத்தள பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேம்படுத்தப்படும்வரை அந்நாட்டுக்கான வர்த்தக சலுகைகள் இடைநிறுத்தி வைக்கப்படும் என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

# மாணவர் இடைவிலகல் அதிகரிப்பது ஏன்?

## யுனிசெவ் ஆய்வில் அதிர்ச்சி

இலங்கை எழுத்தறிவு உள்ளவர்களின் வீதத்தில் மிகவும் உச்சத்தில் இருக்கின்ற போதிலும், அங்கு சில பகுதிகளில், இன்னமும் ஆரம்ப பள்ளிக்கூட மட்டத்திலேயே கல்வியை பாதியில் கைவிடும்சிறார்கள் கணிசமாக இருப்பதாக யுனிசெப் அமைப்பு நடத்திய ஆய்வு ஒன்று கூறுகிறது. இலங்கை அரசாங்கத்தின் ஆதரவுடன் யுனிசெப் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட இந்த ஆய்வின்படி, இலங்கையில் ஏனைய நகரங்கள் மற்றும் கிராமப் புறங்களை விட மலையக தோட்டப்பகுதியைச் சேர்ந்த பிள்ளைகளே அதிகமாக தமது கல்வியை ஆரம்ப பள்ளிக்கூட மட்டத்திலேயே கைவிடுவதாக தெரியவந்துள்ளது.

பள்ளியைக் கைவிடும் சிறார்களைப் பொறுத்தவரை அவர்களது பால் இந்த விடயத்தில் பெரிய வேறுபாட்டை ஏற்படுத்தவில்லையாயினும், மலையக தோட்டங்களில் ஆண் பிள்ளைகளை விட பெண் குழந்தைகளே அதிகமாக ஆரம்பப் பள்ளிக்கூட மட்டத்திலேயே தமது கல்வியை கைவிடுவதாக இந்த அறிக்கை கூறியுள்ளது.


அத்துடன் வறிய பிள்ளைகளே அதிகமாக தமது படிப்பை பாதியில் கைவிடுவதாகவும் இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

சமூக பொருளாதாரக் காரணங்களே பல சந்தர்ப்பங்களில் 5-15 வயது வரையிலான பிள்ளைகள் கணிசமான அளவில் பள்ளிக்கூடக் கல்வியைப் பாதியில் கைவிடுவதற்கான காரணமாக இருப்பதாகவும் யுனிசெப்பின் ஆய்வு சுட்டிக் காட்டுகின்றது.

சிறுபிள்ளைகள் சிறார் தொழிலாளர்களாக பயன்படுத்தப்படுதல், தாயார் வெளிநாட்டுக்கு வேலைக்குப் போதல் ஆகியவையும் இதற்கான ஒரு காரணமாக இருக்கின்றது. பள்ளிவசதிகள் இல்லாமை, பள்ளிக்கூட உட்கட்டமைப்பு சரியாக இல்லாமை, ஆசிரியர்கள் வசதியீனம், வலது குறைந்த பிள்ளைகளுக்கான ஏற்பாடுகள் போதாமை ஆகியனவும் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை பாதியிலேயே விட்டு வெளியேறக் காரணமாகின்றது.

92.3 வீதம் கல்வியறிவைக் கொண்ட இலங்கையில் அதனை 100 வீதமாக மாற்றுவதே தமது இலக்கு என்று கூறியுள்ள இலங்கையின் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, வறுமை, பெற்றோர்களின் கல்வி அறிவீனம், தூர இடங்களில் பள்ளிக்கூடங்கள் அமைந்திருத்தல், பிள்ளைகளில் காணப்படும் பலவிதமான உடற்குறைபாடுகள் பள்ளிகளை விட்டு குழந்தைகள் பாதியில் வெளியேறுவதற்கான காரணமாகக் கண்டறியப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இந்த விடயத்தில் ஆசிரியர்கள் சிறந்த பங்களிப்பைச் செய்ய முடியும் என்று கூறியுள்ள அவர், அவர்களுக்கு மேலதிக பயிற்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று கூறியுள்ளார்.



சுன்னாகம் ஸ்ரீ சந்திர சேகர விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன நூதன பஞ்சதள இராஜ கோபுர திரிதள விமான பிரதிஸ்டா மஹாகும் பாபிஷேகம் நேற்று இடம்பெற்ற போது...

## இராணுவ அதிகாரிகளுக்கு இனி ரஷ்யாவில் பயிற்சி

இலங்கையின் படை அதிகாரிகளுக்கு இனி ரஷ்யாவில் உயர்தர இராணுவப் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கு படையினரை பயிற்சிக்காக அனுப்புவது தொடர்பான விடயத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தியாவுக்கு பயிற்சிகளுக்குச் செல்லும் அதிகாரிகளுக்குப் பாதுகாப்புத் தொடர்பில் அச்சுறுத்தல்களும், உளவியல் ரீதியான பாதிப்புகளும் ஏற்படுவதாக அரசாங்கம் கருதுவதாகத் தெரிகிறது.

இதனால் தமது படையதிகாரிகளை பயிற்சிக்காக இந்தியா அனுப்பும் விடயத்தை மீள்பரிசீலனை செய்யவும், அவர்களுக்கு சீனா, ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளில் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுக்கவும் அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

## அமைச்சர்...

மன்றில் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எதிராளிக் கம்பனியான 'உதயன்' பத்திரிகையின் பிரசுரிப்பாளருக்கும், அதன் ஆசிரியருக்கும் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் கணேசராசாவை விழித்து உங்களின் கட்சிக்காரர்கள் இவ்வழக்குகளை சமாதானமாக தீர்த்துக் கொள்ளக்கூடிய வகையில் வழக்காளியான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்நீதிமன்றத்திலும் தங்களுடைய பத்திரிகையிலும் மன்னிப்புக் கோரும் முறையில் முயற்சி செய்வதற்கு வழக்கறிஞரான நீங்கள் உங்களுடைய கட்சிக்காரர்களை தூண்ட வேண்டுமென ஆலோசனை வழங்கினார்.

அதேபோன்று எதிராளிகளான 'உதயன்' பிரசுரிப்பாளரும், அதன் ஆசிரியரும் தனது ஆலோசனைக்கு அமைவாக அமைச்சரிடம் மன்னிப்புக் கோரும் பட்சத்தில் இவ் வழக்குகளை சமாதானமாக முடிவுக்கு கொண்டு வருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் ஊக்குவிக்குமாறு அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணிக்கு மாவட்ட நீதிபதி ஆலோசனை வழங்கினார்.

இவ்வழக்குகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.அப்துல் நஜீம்முடன் சட்டத்தரணி தேவராஜன் ரெங்கன், சட்டத்தரணி செலஸ்ரின் ஸ்ரனிஸ்லோஸ் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

இவ்வழக்கின் மேலதிக விசாரணை செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த மற்றுமொரு மானநஷ்டஈடு கோரும் வழக்கு நேற்று அழைக்கப்பட்ட வேளையில் எதிராளி உதயன் பத்திரிகை நிறுவனத்தின் சார்பாக முறையான பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் அவ்வழக்கை வழக்காளி சார்பாக ஒருதலைபட்ச விசாரணைக்கு நியமிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பாக ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.அப்துல் நஜீம் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இதற்கு தனது எதிர்ப்பை தெரிவித்து சட்டத்தரணி கணேசராசா சமர்ப்பணங்களைச் செய்தார்.

இரு தரப்பினரதும் வாதப் பிரதிவாதங்களை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு இது தொடர்பாக மாவட்ட நீதிபதி தனது தீர்மானத்தை யூலை மாதம் 9 ஆம் திகதி தெரிவிப்பதாக அறிவித்து குறித்த வழக்கை யூலை 9 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## இலங்கையில்...

யானது, தங்களுக்கு சமாதானத்தை ஏற்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உள்நாட்டில் போட்டுக் கொண்ட பாதை அமைப்பு என கமலேஷ் சர்மா கூறியுள்ளார்.

பொதுநலவாய அமைப்பானது, மனித உரிமைகள், ஊடகத் துறை மற்றும் நீதித்துறை என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டு இலங்கையில் செயற்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல் படுத்துவதற்கான சகல ஒத்துழைப்புகளையும் வழங்க பொதுநலவாய நாடுகள் அமைப்புத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## மாணவி மீது...

றுக்கு அங்கு சமூகமளித்திருந்த கிளிநொச்சி இந்துக் கல்லூரி

அதிபர், குறித்த ஆசிரியர் மீது கரைச்சி கோட்டக்கல்விப் பணிமனை நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தம்மிடம் தெரிவித்ததாக ரி.கனகராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்ட மாணவியின் பெற்றோர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தனர். அத்துடன், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகளும் இவ்விவகாரம் குறித்து தீவிர கவனம் செலுத்தியிருந்த நிலையிலேயே கரைச்சிக் கல்விக் கோட்டம் குறித்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## மதுபோதையில்...

பட்டது. இதனால் பயணிகள் பலர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இச்சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சாவகச்சேரி போக்குவரத்துப் பொலிஸாரினால் அதிவேகமாக பேருந்தைச் செலுத்தியமைக்காக பரிசோதனை மேற்கொண்ட போதே சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இப்பேருந்து யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிச் சென்ற வேளையிலேயே இவ்வாறு பொலிஸாரினால் பரிசோதனைக்கு உட்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஸ்தம்பித்தது...

இதனால் பங்கு வர்த்தகம் பல மணி நேரம் ஸ்தம்பிதமடைந்தது. வாடிக்கையாளர்கள் பலர் குழப்பமடைந்து காணப்பட்டனர். இது தொடர்பான விசாரணைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## '13' குறித்து அரசுடன்...

முதல் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது 13 ஆம் திருத்தச் சட்டம் உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் முனைப்புக்கு முழு அளவில் யதார்த்தமான ஒத்துழைப்பு வழங்கத் தயார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சுட்டிக் காட்டியுள்ளார். நிரந்தரமான தீர்வுத் திட்டமொன்றையே தமிழ் மக்கள் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறெனினும், தமிழ் மக்களின் மெய்யான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க அரசாங்கம் தயாரி ல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறுவது குறித்து தீர்மானிக்கவில்லை,

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம்பெறுவதா இல்லை என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னும் முடிவு செய்யவில்லை என அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் குறித்து அறிவித்த பின்னர், தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதா இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்தியா சென்றிருந்த சம்பந்தன் உள்ளிட்ட கூட்டமைப்பின் பிரதிநிதிகள், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து 45 நிமிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தை திருத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், இந்தியா எப்படியான செயற்பாடுகளை முன்னெடுக்கும் என்பது குறித்து இங்கு பேசப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

## பூநகரி...

நூற்றுக்கணக்கான பொது மக்களும் பிரதேச சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவரும் கலந்து கொண்டு தவிசா்ளரின் நடவடிக்கைகளுக்கு எதிராக தங்களின் எதிர்ப்பினை வெளிப்ப டுத்தினர்

பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் சபையில் எடுக்கப் படுகின்ற தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில்லை, ஒப்பந்த வேலைகள் முடிக் கப்பட்ட பின்னரும் கொடுப்பனவுகளை வழங்காது இழுத்தடிப்பது, 6. 5 மில்லியன் ரூபா செலவில் கட்டிய சந்தையை இயங்க விடாது தடுத்தமை, மக்களுக்கான குடிநீர் விநியோகத்திற்கு எதிராகச் செயற்படுகின்றமை, நிதிக்குழுவினை கூட்டுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் அக்கறையின்றி இருத்தல், செயலாளர் உள்ளிட்ட பணியாளர்களை அவதூறாகப் பேசுதல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்து எதிர்ப்பு உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உண்ணாவிரதத்தின் முடிவில் தவிசாளருக்கு எதிராக அடுத்த சபைக் கூட்டத்தின் போது ஆளும் கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவது எனத் தீர்மானிக்கப்பட்டு அதன் அறிக்கைகள் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (29, 112)

## தன்சானியா...

மகிந்த ராஜபக்ஷவிற்கும், தன் சானியா ஜனாதிபதி ஜகயாரிசோ கிக்வேத்தேக்கும் இடையே, நேற்று முன்தினம் இரு தரப்பு உறவுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்த வேண்டிய தருணம் வந்துள்ளதாக குறிப்பிட்டதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# யாழ். குடாவில் கைத்தொழில் அபிவிருத்தி; ஊக்குவிக்க தொடர் நடவடிக்கை




யாழ்.மாவட்டத்தில் அமைந்துள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு கீழான கைத்தொழில் நிலையங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் விஜயம் மேற்கொண்டு தொழிற்துறை நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து கொண்டார்.

குறித்த கைத்தொழில் நிலையங்களுக்கு அமைச்சர் நேற்று முன் தினம் விஜயம் மேற்கொண்டார்.இதன்போது சங்கானையில் அமைந்துள்ள அத்திரான் தோற்பொருள் உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்டு தொழில் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தார்.

இதேபோன்று அச்சுவேலியில் அமைந்துள்ள வாழைநார் உற்பத்தி நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் தொழில் நடவடிக்கைகளை பார்வையிட்டதுடன் தொழில்சார் பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.நீர்வேலியில் அமைந்துள்ள இரும்புசார் உற்பத்தி தொழிற்சாலைக்கு விஜயம் மேற் கொண்ட அமைச்சர் தொழிற்துறை நடவடிக்கைகளை பார்வையிட்டதுடன், தொழிலாளர்களது பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்துகொண்டார். இதனிடையே வதிரிதோற் பொருள் நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அவர்கள், அங்கு தொழிற்துறை நடவடிக்கைகளை பார்வையிட்டதுடன் தொழிற்சாலைகளின் தேவைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார். இதேபோன்று அல்லாரை தும்புத் தொழிற்சாலைக்கு சென்ற அமைச்சர் அவர்கள், உற்பத்திகளை பார்வையிட்ட அதேவேளை, உற்பத்திகள் தொடர்பில் தொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

இதனிடையே அங்குள்ள பண்ணைக்கும் அமைச்சர் அவர்கள் விஜயம் மேற்கொண்டதுடன், அங்கு செய்கை பண்ணப்பட்டுள்ள பயன்தரு மரக்கன்றுகளையும் பார்வையிட்டார்.

இதன்போது வதிரி தோற்பொருள் நிலையம் மற்றும் அல்லாரை தும்புத் தொழிற்சாலை ஆகியவற்றின் விற்பனை நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் முகமாக புதிதாக இரண்டு சிறியரக வாகனங்களைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவ ஞானசோதி, அமைச்சின் பணிப்பாளர் அஜித் ஏக்க நாயக்க, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ்.மாவட்ட பணிப்பாளர் கெங்காதரன், யாழ். மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வங்கியிலிருந்து எடுத்துவரப்பட்ட 2இலட்சம் ரூபா பணம் அபகரிப்பு

## பொலிகண்டியில் சம்பவம்

(வடமராட்சி)

முதியவர் ஒருவர் வங்கியிலிருந்து எடுத்து வந்த இரண்டு இலட்சம் ரூபா பணம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் அபகரித்துச் செல்லப்பட்ட சம்பவம் நேற்று வடமராட்சி பொலிகண்டி குரநாதர் கோயிலடியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்

இறக்பத்தை வல்வெட்டியை சேர்ந்த சின்னத்துரை சிங்சுந்தரம் (வயது 62) என்பவர் நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையிலிருந்து இரண்டு இலட்சம் ரூபா பணத்தினை எடுத்துக் கொண்டு துவிச்சக்கரவண்டியில் வீடுநோக்கிச் சென்றுள்ளார்.

இவர் பொலிகண்டி குருநாதர் கோயிலடிப்பகுதியில் பகல் 11.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முதியவரை தள்ளி வீழ்த்தி பணத்தினையும் வங்கிப் புத்தகத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த பொதுமகன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை துரத்திச்சென்றபோது நவிண்டில் பகுதியில் கத்தியை காட்டி துரத்திச் சென்றவரை மிரட்டிவிட்டு தப்பி யோடியுள்ளார்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் தீவிர விசாரணை களைமேற்கொண்டுள்ளனர். 9153என்றஇலக்கமுடைய மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே பணத்தை அபகரிக்கப்படுகிறது. (116)

# பல்கலை அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இவ்வருடத்திற்குள் பல்கலைக்கழக அனுமதியை வழங்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நடடிவக்கை எடுத்துள்ளது.

2012இல் சித்தியடைந்தவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கோரி நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் விண்ணப்பிக்க முடியுமென ஆணைக்குழுவின் தலைவி பேராசிரியை ஷானிக்கா விநிரிபுரேகம தெரிவித்துள்ளார்.

நாளை பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி விண்ணப்பங்கள்பத்திரிகைகளில் பிரசுரமாகும் இதற்கமைய நாடளாவிய ரீ[illegible]யில் மாவட்டந்தோறும். விண்ணப்பங்களை விநியோகிக்கும் முகவர்கள் பெயர் விபரங்களும் வெளியிடப்படும். இவ்விபரங்களுக்காக மாணவர்கள் தமக்கான விண்ணப்பப் படிவத்தினையும் அத்துடன் இணைந்ததாக வழங்கப்படும். அனுமதிக்கான கையேட்டினையும் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை யூலை 22ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ பல்கலைக்கழக மாணியங்கள் ஆ[illegible] குழுவிடம் ஒப்படைக்கவே[illegible]

தமது பெறுபேறு மற்று[illegible] இசட் புள்ளிகளுக்கமையதமக்குரிய பாடங்களை தெரிவு செய்ய முன்வரவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருசில பாடத்திட்டங்களுக்கு திறமைகளை பரீட்சை நடத்தப்பட வேண்டியுள்ளது. இவை குறித்து அனுமதி கையேட்டில் அறிந்து கொள்ள முடியும் அத்துடன் திறமைகாண் பரீட்சை நடத்தப்படும் திகதி குறித்து பின்னர் அறியத்தரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# வழிமறித்துக் கொள்ளை; பணம்பறிகொடுத்தார் முகாமையாளர்

(திருநெல்வேலி)

கல்வியங்காடு சந்தியில் உள்ள நல்லூர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் இரவு நேரம் நிலையத்தைப் பூட்டிவிட்டுப் பணத்துடனும், திறப்புக்களுடனும் தனது வீடு நோக்கி சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது கொள்ளையர்களினால் வழி மறிக்கப்பட்டு அவரிடமிருந்த பணமும் திறப்புக்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கல்வியங்காடு கலைமகள் வீதியில்இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சைக்கிளில் இருந்து தள்ளி விழுத்தப்பட்டு இவர் கொண்டு சென்ற சுமார் இரண்டு இலட்சத்து எண்பதினாயிரம் ரூபா பணமும், நிலைய சாவிகளும் இருந்த இவரது பை பறித்துச் செல்லப்பட்டது. கொள்ளையர்கள் மோட்டார் சைக்கிளில் வந்ததாகத்தெரிய வருகின்றது.

இது பற்றிக் கோப்பாய் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்துப் பெருமளவிலான பொலிஸார் சம்பவஇடத்துக்கு விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கல்வியங்காட்டில் உள்ள மற்றொரு தனியார் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரும் நிலையத்தைப் பூட்டிவிட்டுப் பணத்துடன் இரவு நேரம் வீட்டுக்கு சென்ற சமயம் முன்னர் சில தடவைகள் அவரிடமும் பணம் இடையில் வைத்துப் பறித்துச் செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (137)

# கட்டுரைப்போட்டிக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

'அவளின் கதைகள்' கட்டுரைப்போட்டிக்கான ஆக்கங்கள் மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

18வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் தமது பாடசாலை அதிபரினூடாக உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் அவசியமாகும்.

ஆக்கங்கள் 10.07.2013இற்கு முன்னர் விழுது ஆற்றல் மேம்பாட்டுமையம், இல 23, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தரமானஇரு கட்டுரைகளுக்கு வெகுமதியான பரிசில்கள் வழங்கப்படுவதுடன் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## வினைத்திறமைகாண் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகர் சேவை தரம் III மற்றும் தரம் IIஇல் உள்ள அலுவலர்களுக்கான வினைத் திறமைகாண் தடை பரீட்சை 2011 எதிர்வரும் ஒக்ரோபர் 2013இல் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் இப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து அனுப்புதல் வேண்டும். மும்மொழிகளிலும் இப்பரீட்சை நடைபெறும்.

பரீட்சைதிட்டம், பரீட்சை நடைபெறும் வெளியிடுகை, மற்றும் விபரங்களை 28.06.2013 அரச வர்த்தக மானியை பார்வையிடலாம். (105)

எந்தத் தொழில் தேர்ச்சியும் இல்லாமல் வெளிநாடு சென்று கூலித் தொழில் செய்வதைவிட வருமானத்துடன் தொழில் பயிற்சியையும் பெற்று, கூடுதல் வருமானத்துடனான தொழில் வாய்ப்புக்களைப் பெறுங்கள்

மாதம் 50,000/- வருமானம் & பிரித்தானிய, அவுஸ்ரேலிய சான்றிதழ்களுடன் SEGi பல்கலைக்கழகத்தில் தொழிற்பயிற்சியைப் பெற்று விரும்பிய நாட்டுக்குச் சென்று

இலட்சக்கணக்கில் சம்பாதியுங்கள்

- IELTS, தூதரக நேர்முகத் தேர்வு, விசா அலுவலகங்களுக்கு அலையாமல் எம்மிடமே நேரடியாக விசாவைப் பெற்றுக்கொள்ளலாம்.
- மாத வருமானத்தை உறுதிப்படுத்தும் எழுத்து மூலமான உத்தியோகபூர்வ தொழில் ஒப்பந்தம் (Job Contract) மற்றும் Work Permit
- ஃபிறிட்ஜ், வொஷிங் மெஷின், வீட்டுத் தளபாடங்கள், WiFi Internet வசதிகளுடன் நவீன சொகுசுமாடிக் கட்டடத்தில் இலவச தங்குமிட வசதி
- வெளிநாடு சென்ற பின்னரும், உங்கள் பாதுகாப்பு, வருமானம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும் உத்தரவாதமான தொடர் சேவை

மேலதிக விபரங்களுக்கு 0773 616 798

சிகரம்

153, பலாலி வீதி, கந்தரமடம், யாழ்ப்பாணம். (DAMROவுக்கு முன்னால்)

தொ.பே.: 021 222 00 11

மி.அ.: edusikaram@gmail.com web: www.sikaram.lk

(C-2538)

# மன்மத தோஷம் அகற்றிய ஆலய பூசகர் கைது

தன்னை பிடித்திருக்கும் தோஷத்தை கழிப்பதற்காக சென்ற 17 வயதான யுவதியை நிர்வாணப்படுத்தி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற ஆலய கப்புறாளையொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.யுவதியின் உடல்முழுவதும் எண்ணெய் பூசி தேசிக்காய் வெட்டுவதற்கு முன்னர் அந்த யுவதியை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்றபோதே அந்த கப்புறாளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கப்புறாளையை கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்திய போது அவரை எதிர்வரும் 07 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பொல்கஸ்வோவிட்ட சியம்பலாகொட ஜாம்கஸ் சந்தியைச்சேர்ந்த 51 வயதான சந்திரசிறி பெர்னாண்டோவே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.குறித்த யுவதிக்கு "மன்மத தோஷம்" பிடித்திருப்பதனால் அருக்கு இவ்வாறான முறையிலேயே தோஷத்தை கழிக்கவேண்டுமென கப்புறாளை தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் குறித்த யுவதியை பல நாட்கள் நிர்வாணமாக்கி அந்த யுவதியின் உடல் முழுவதும் எண்ணெய் பூசியுள்ளார்.

பல நாட்கள் எண்ணெய் பூசியதன் பின்னர் தேசிக்காய் வெட்டுவதற்கு நாளொன்றை குறித்துள்ளார். அன்றையதினம் யுவதி வந்ததும் அன்றும் யுவதியை நிர்வாணப்படுத்தி உடல்முழுதும் எண்ணெய்பூசியதுடன் துஷ்பிரயோகத்திற்கும் உட்படுத்துவதற்கு முயன்றுள்ளார்.

இதனையடுத்து அங்கிருந்து தப்பிவந்த யுவதி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டையடுத்து இந்த கப்புறாளையை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட யுவதியை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.